**பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர் இலக்கம் 330**

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்**

**எட்டாவது பாராளுமன்றம்**

(முதலாவது கூட்டத்தொடர்)

# 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவின்

**அறிக்கை**

குழுவின் தவிசாளர்

**கௌரவ மஹிந்த சமரசிங்ஹ**

அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது

2017, திசேம்பர் மாதம் 05 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தால் அச்சிடப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தில் கொள்வனவு செய்ய முடியும்

## 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ ( தவிசாளர்)
கௌரவ ஜோன் அமரதுங்க
கௌரவ ரஊப் ஹகீம்
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ ரவீந்திர சமரவீர
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ டக்ளஸ் தேவானந்தா
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி
கௌரவ வடிவேல் சுரேஷ்
கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி
கௌரவ சி. சிறீதரன்
கௌரவ செஹான் சேமசிங்க
கௌரவ அஜித் மான்னப்பெரும
கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ ஹர்ஷன ராஜகருணா
கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன
கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

**அறிக்கை**

2017, ஒக்தோபர் மாதம் 17 ஆம் திகதி பாராளுமன்றச் சபை முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் பிரேரணை பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. பாராளுமன்ற சபை முதல்வர்,— 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினாலும்;

ஒரே தினத்தில் பல்வேறு செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாட நேர்ந்துள்ளதால், அதற்கிணங்க ஒவ்வொரு அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்களை கலந்துரையாடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வரையறைக்குட்பட்டுள்ள-மையாலும்;

பாராளுமன்றச் சபை முதல்வர் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகியோரின் இணக்கத்தின் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பின் பிரகாரம் 10 அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடிக் கலந்துரையாடுவதற்கு இயலச்செய்யும் வகையில் பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

   (ஆ) பாராளுமன்றத்தின் 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், அக்குழுவானது அரசாங்கக்கட்சியிலிருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட இருபத்தியொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

3. அக்குழுவானது,

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்; மற்றும்

   (ஆ) ஆட்கள், பத்திரங்கள் மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும் யாரேனும் நபரைப் பாராளுமன்றத்திற்கு அல்லது அக்குழுவின் முன் சமுகமளிக்குமாறு உத்தரவிடுவதற்கும்;

   அதிகாரம் உடையதாய் இருத்தல் வேண்டும்.

4. மேற்படி தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்களின் குழுநிலை ஆய்வு ஆரம்பிக்கும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அக்குழு அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## இணைப்பு

i. மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

ii. சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

iii. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு

iv. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு

v. புத்தசாசன அமைச்சு

vi. தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு

vii. சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

viii. விசேட பணிப்பொறுப்புக்கள் அமைச்சு

ix. தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

x. விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

அதற்கிணங்க, கௌரவ சபாநாயகரால் 2017 நவநம்பர் மாதம் 07 ஆம் திகதி கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்களை தவிசாளராகக் கொண்ட குழுவில் சேவையாற்றுவதற்கு பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்,-

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ ( தவிசாளர்)
கௌரவ ஜோன் அமரதுங்க
கௌரவ ரஊப் ஹகீம்
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ ரவீந்திர சமரவீர
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ டக்ளஸ் தேவானந்தா
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி
கௌரவ வடிவேல் சுரேஷ்
கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி
கௌரவ சி. சிறீதரன்
கௌரவ செஹான் சேமசிங்க
கௌரவ அஜித் மான்னப்பெரும
கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா
கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன
கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கு ஏற்ப 10 அமைச்சுக்கள் தொடர்பான செலவுத் தலைப்புகள் பற்றி உங்களது குழுவினால் கலந்துரையாடுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

2017 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற அதன் முதலாவது கூட்டத்தில் 10 அமைச்சுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டிற்கான செலவுத் தலைப்புகள் பற்றி 2017 நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை மு.ப. 10.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரை பரீசீலனைக்கு எடுத்துக் கொள்வதென தங்கள் குழு தீர்மானித்தது.

அதற்கமைய சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பங்கேற்புடன் வெளிப்படையானதும் பயன் மிக்கதுமான கலந்துரையாடலை நடத்துவதற்கு தங்கள் குழு விரும்பியதால் குழுவின் கலந்துரையாடல்களில் அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளலாம் என்பது தொடர்பாக தங்கள் குழு நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரித்து அதனை சகல உறுப்பினர்களுக்கும் 2017 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அனுப்பி வைத்தது. இவ்வாறான கலந்துரையாடல் கடந்த காலங்களில் பல தீர்க்கப்படாத விடயங்களுக்கு தீர்வைப்பெற்றுக்கொள்ள வழி வகுத்தது என்பதைக் குழு தெரிவிக்க விரும்புகின்றது. அவ்வாறு சகல பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் இவ்வறிக்கையின் **(பின்னிணைப்பு I)** இல் தரப்பட்டுள்ளது.

அதேபோன்று, அமைச்சின் செயலாளரையும், செயலாளர் அவசியம் எனக் கருதும் சம்பந்தப்பட்ட அமைச்சினதும் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களினதும் அதிகாரிகள் மற்றும் திறைசேரியின் அதிகாரிகள், தேசிய வரவு செலவு திட்ட திணைக்கள அதிகாரிகள், திட்டமிடலுக்கான தேசிய திணைக்கள அதிகாரிகள், அரச கணக்கீட்டுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை குழுவின் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதற்கு வரவழைப்பதெனவும் தேவையான தகவல்ளைப் பெற்றுக்கொள்வதெனவும் தங்கள் குழு தீர்மானித்தது.

தங்கள் குழு அதன் கலந்துரையாடலை 2017 நவெம்பர் 17 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஆரம்பித்து 2017 நவெம்பர் 23 ஆம் திகதி பி.ப. 5.00 மணிக்கு முடிவுறுத்தியது.

வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடும் செயற்பாடானது 2008, 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றது போன்று இம்முறையும் ஏழாவது தடவையாக தொடர்ந்தது. பல முக்கிய மற்றும் தீர்க்கப்படாத விடயங்கள் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அமைச்சுகளின் முக்கிய உத்தயோகத்தர்கள் மற்றும் திறைசேரி

உத்தியோகத்தர்களுடன் விரிவாக ஆராயப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டு தீர்க்கப்பட்டதனால், குழுநிலை விவாதத்திற்கு முன்னர் தெரிகுழு ஒன்றில் வருடாந்த மதிப்புரைகளைக் கலந்துரையாடுவதற்கான இந்நடைமுறை வெற்றிகரமானதும் ஆக்கபூர்வமானதுமென நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் தங்கள் குழு மகிழ்ச்சியடைகின்றது. இக் குழுதொடர்பிலான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆர்வம் மற்றும் அதன் கலந்துரையாடல்களில் அவர்களின் பங்களிப்புதொடர்பில் உங்களது குழு அதன் பாராட்டுக்ளைத் தெரிவிக்கின்றது.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரும் தெரிகுழுவின் தவிசாளருமான கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் இந்நிகழ்வை வெற்றிகரமாக்குவதில் வழங்கிய சேவைகளை குழு பாராட்டுகின்றது.

மேற்சொல்லப்பட்ட அமைச்சுக்களின் கீழ் ஒதுக்கப்பட்ட விடயங்களுக்கும் பணிகளுக்கும் பொறுப்பாக்கப்பட்ட கௌரவ அமைச்சர்களின் வருகை, உறுப்பினர்களுக்கு விடயங்களை விளக்கிக் கூறுவதில் பங்களிப்பு மற்றும் வினாக்களுக்கு விடையளித்தல் ஆகியவற்றை தங்கள் குழு பாராட்டுகின்றது.

ஒவ்வொரு அமைச்சின் கீழ் வரும் அமைச்சுகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான பல்வேறு விடயங்களை கலந்தாலோசிக்கும் குழுக் கூட்டங்களில் சமூகமளித்திருந்த குழு உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பங்களிப்புகளுக்காக குழு அதன் பாராடுதல்களைத் தெரிவிக்கின்றது.

கௌரவ உறுப்பினர்களின் கூட்டத்திற்கான பங்களிப்பு இதைவிட மேலாக இருக்குமேயானால் குழுவின் கலந்துரையாடல்கள் பாராளுமன்றத்திற்கும் நாட்டிற்கும் இதை விட பிரயோசனமாகவும், பயன்மிக்கதாகவும் இருக்குமென குழு மேலும் தீர்மானிக்கின்றது.

அமைச்சுக்களின் செயலாளர்களினால் வழங்கப்பட்ட பங்களிப்புகள் மற்றும் கூட்டங்களுக்குச் சமூகமளித்திருந்த பிரதான அலுவலர்கள் ஆகியோரை தங்களது குழு பாராட்டுவதோடு, ஒவ்வொரு கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் அவர்கள் வழங்கிய எண்ணிலடங்காத சமர்ப்பணங்கள் பற்றியும் அவர்களுக்கு நன்றி கூறுகிறது.

குழுவிற்கு உதவி புரிவதற்கு சகல கூட்டங்களிலும் சமூகமளித்து குழுவிற்குத் தேவையான சகல தரவுகள் மற்றும் தகவல்களை வழங்கிய திறைசேரி அலுவலர்களுக்கும் மற்றும் கணக்காய்வாளர்கள் திணைக்களத்தின் அலுவலர்களுக்கும் தங்கள் குழு நன்றியுடையதாகவுள்ளது.

இம்முயற்சியில் குறுகியகால எல்லையினுள் பாராளுமன்ற செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்த சேவைகள் மிகவும் வினைத்திறன் வாய்ந்ததாகவிருந்தமையை தங்கள் குழு அவதானிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் அலுவலர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் சுமுகமாகவும் சிநேகபூர்வமானதாகவும் இருந்ததோடு இக் கலந்துரையடல்கள் மூலம் பல தீர்க்கப்படாத விடயங்கள் தீர்க்கப்படலாம் என்பதை தங்கள் குழு தெரிவிக்க விரும்புகின்றது.

இந்த நடவடிக்கை எதிர்காலத்திலும் மேம்படுத்தப்பட்டு தொடரப்படல் வேண்டுமென

தங்கள் குழு பாராளுமன்றத்திற்கு விதந்துரைப்பதோடு, ஒவ்வொரு வருடத்திலும் குழு நிலை விவாதத்திற்கு முன்னர் சகல செலவுத் தலைப்புகளினதும் மதிப்பீடுகள் தெரிகுழுவினால் பரிசீலனை செய்யப்படுமானால் இந்த நடைமுறை மிகவும் பயன்மிக்கதாக அமையும் எனப் பிரேரிக்கப்படுகின்றது. இந்த நடைமுறை வரவு செலவுத் திட்டத்தின் முழுமையான பாராளுமன்றக் குழுநிலை விவாதத்தில் உறுப்பினர்களுக்குக் கிடைக்காத விடயங்களை அதிகாரிகளுடன் தெளிவுபடுத்திக்கொள்ளும் வாய்ப்பை இது வழங்கக் கூடியதான நல்லதொரு சந்திப்பை ஏற்படுத்துகின்றது. அத்துடன், நடப்பு ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட முன்னேற்றம் மற்றும் எதிர்வரும் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னிலைப்படுத்துவதற்கும் இது வழிவகுக்கின்றது.

குழுக்கூட்டங்களில் வார்த்தைக்கு வார்த்தையாக பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் தொகுக்கப்பட்டு அவை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் இலகுவான உசாவுகைக்கென நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. குழுக் கூட்ட அறிக்கைகள் இவ்வறிக்கையின் **(பின்னிணைப்பு II)** இல் தரப்பட்டுள்ளது,-

கலந்தாலோசனைகளின் சாரம்சம் மற்றும் கூட்டங்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் ஆகியவற்றுடன் தங்களது குழுவினால் பரீசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அமைச்சுடனும் தொடர்புடைய செலவுத் தலைப்புகளின் கீழான 2018 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் கீழே தரப்பட்டுள்ளன

***செலவுத் தலைப்பு – 165- தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சு***

| ரூபா. 000 | 2016 | 2017 மீள்வரவுசெலவுத் திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்த செலவினம் | 364,596 | 3,531,751 | 2,770,318 |
| மொத்த மீண்டுவரும் செலவினம் | 70,893 | 112,405 | 116,308 |
| மொத்த மூலதனச் செலவினம் | 293,703 | 3,419,346 | 2,654,010 |
| **165- தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர்** | | | |
| மொத்த செலவினம் | 364,596 | 3,531,751 | 2,770,318 |
| மொத்த மீண்டுவரும் செலவினம் | 70,893 | 112,405 | 116,308 |
| மொத்த மூலதனச் செலவினம் | 293,703 | 3,419,346 | 2,654,010 |

குழு ,தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செலவுத் தலைப்பு 165 க்கான மதிப்பீட்டை ஆராய்ந்து அங்கீகரித்தது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் திரு.வீ.சிவஞானசோதி அவர்கள் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பிரேரணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பதினொரு மூலதத்துவங்கள் தொடர்பில்

குறிப்பிட்டதுடன் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் மாற்றுத்திறனுடைய பெண்களின் தேவைகள் தொடர்பில் விசேட செயற்றிட்டம், வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம், நல்லிணக்கப்பாட்டை நோக்காகக் கொண்ட பொருளாதார வலுவூட்டுகை மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் என்பன தொடர்பில் விளக்கமளித்தார். அத்துடன் கிளிநொச்சியிலும் நெடுந்தீவிலும் பனை பதனிடும் இரண்டு நிலையங்களைத் தாபித்தல் மற்றும் கொழும்பு மற்றும் தம்புல்ல அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார மையத்துடன் இணைந்த வகையில் யாழ்ப்பாணத்தில் நவீன பொருளாதார மையமொன்ற ஏற்படுத்தல் தொடர்பிலும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே ஒருங்கிணைப்பு மற்றும் மத சமத்துவம் உறுதி செய்யப்பட வேண்டும் என குழு உறுதி செய்தது.

சில மாவட்டங்களில் சிறு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பதிலளிக்கப்பட்டது. பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக்கொள்வதற்காக மதத் தலைவர்கள், பொலிஸ் பிரிவு, ஓய்வுபெற்ற நீதிபதிகள், ஓய்வுபெற்ற அதிபர்கள் ஆகியோரைக் கொண்ட கீழ் மட்டத்திலான குழுவான மாவட்ட மட்டத்திலான நல்லிணக்க குழுக்களைத் தாபித்தல் தொடர்பில் மேதகு சனாதிபதி அவர்கள் முயற்சிசெய்வதாக குழு குறிப்பிட்டது.

வட மாகாணத்தில் முதலீட்டு சந்தர்ப்பங்களை ஆரம்பித்து வாழ்க்கை வழிகளை அமைப்பதுடன் முதலீட்டில் அக்கரையுடைய முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் திட்டங்களை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குழு பரிந்துரை செய்தது.

அதேபோல் இப்பிரதேசத்தில் வீதி கட்டமைப்பு, பாடசாலை அபிவிருத்தி எனும் செயற்றிட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் குழு தெரிவித்தது.

***செலவுத் தலைப்புக்கள் – 157, 236 - தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு***

| ரூபா. 000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச்செலவினம் | 587,787 | 1,063,390 | 762,570 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 422,422 | 527,299 | 524,670 |
| மூலதனச் செலவீனங்கள் | 165,365 | 536,091 | 237,900 |
| **157- தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் அரச கரும மொழிகள் அமைச்சர்** | | | |
| மொத்தச்செலவினம் | 452,107 | 895,408 | 609,305 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 327,391 | 392,667 | 385,405 |

| | | | |
|---|---|---|---|
| மூலதனச் செலவீனங்கள் | 124,715 | 502,741 | 223,900 |
| **236 - அரச கரும மொழிகள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 135,680 | 167,982 | 153,265 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 95,031 | 134,632 | 139,256 |
| மூலதனச் செலவீனங்கள் | 40,649 | 33,350 | 14,000 |

குழு, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் 157 மற்றும் 236ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்து அங்கீகரித்தது.

குழு, அண்மையில் பெற்ற கடனைத் மீளச் செலுத்த முடியாமல் வடக்கு கிழக்கைச் சாரந்த மக்கள் அநேகர் தற்கொலை செய்துகொண்ட விகிதாசாரத்தினை அறிந்துகொண்டதன் மூலம், அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தின் கீழ் நுண்நிதிக் கடன் திட்டக்கம்பனிகளை பதிவுசெய்வதற்காக நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டுமென அமைச்சினை வேண்டிக்கொண்டது.

குழு, இலங்கையர்கள் மத்தியில் தேசிய மொழிகள் தகைமையை மேம்படுத்துவதனை துரிதப்படுத்த வேண்டுமென குறிப்பிட்டதோடு, அமைச்சு தேசிய மொழிகளை மேம்படுத்த புதிய தொழில்நுட்பங்களையும், உத்திகளையம் பயன்படுத்த வேண்டுமெனவும் பரிந்துரை செய்தது.

குழு, தவிசாளரின் ஆலோசனைக்கிணங்க, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படவேண்டுமெனவும் பாடசாலைகளில் தேசியமொழி கொள்கையை அமுல்படுத்துவதற்கு நிகழ்சிச்த்திட்டமொன்றினை வகுக்கவேண்டுமெனவும் இது தேசியமொழியினை ஊக்குவிப்பதற்குச் சிறந்த வழியாகுமெனவும் விதந்துரைத்தார்.

***செலவுத் தலைப்பு– 194*** **தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச்செலவினம் | 995,714 | 17,622,994 | 2,270,142 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 130,629 | 210,203 | 214,142 |
| மூலதனச் செலவீனங்கள் | 865,085 | 17,412,791 | 2,056,000 |
| **194- தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்** | | | |
| மொத்தச்செலவினம் | 995,714 | 17,622,994 | 2,270,142 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 130,629 | 210,203 | 214,142 |
| மூலதனச் செலவீனங்கள் | 865,085 | 17,412,791 | 2,056,000 |

தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செலவுத் தலைப்பு 194 க்கான மதிப்பீட்டை ஆராய்ந்து அங்கீகரித்தது

அமைச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 17 பில்லியன்கள் நிதியில் 15 பில்லியன்கள் செயற்றிட்டங்கள் தொடர்பில் செலவு செய்யப்படாமை பற்றி குழு அவதானித்தது.

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள் நடாத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் தொடர்பாக அமைச்சிக்களுக்கிடையேயான நடவடிக்கைகளுக்கு சுறுசுறுப்பான செயற்பாட்டை வழங்குவதற்காக மேதகு ஜனாதிபதியினால் தலைமைத்துவம் வழங்கப்படவிருக்கின்ற அனர்த்த முகாமைத்துவ சபை போன்ற குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு குழுவின் தவிசாளர் பரிந்துரைத்தார். தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் அதிகாரியிடம் கௌரவ மயந்த திஸாநாயக்க பின்வரும் கேள்விகளைக் கேட்டுள்ளார்:

குழுவின் தவிசாளர், அரச சார்பற்ற விற்பனையாளர்களுக்கான திட்டங்களை ஒதுக்கீடு செய்வதை குறைப்பதற்கும் திறந்த டெண்டர்களை வழங்குவதற்கும், மறுப்பு தெரிவிக்கும் முதல் உரிமையினை ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் பரிந்துரை செய்ததுடன் இது சிறந்த விலையினைப் பொருந்திய பின் எந்த அரசாங்க நிறுவனத்திற்கும் டெண்டர்களை வழங்குவது தொடர்பில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைக்கு உதவும் எனவும் குறிப்பிட்டார்.

தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவராண்மையினால் வரையப்பட்ட தகவல் முறைமைத் தரத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளருக்கு கௌரவ மஹிந்த சமரசிங்க அறிவுறுத்தியுள்ளார். பின்னர் அது தேசிய தரமாக கருதப்பட முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

நிதிப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு குறைநிரப்பி மதிப்பீட்டை முன்மொழிவதற்கான அமைச்சின் முடிவு பற்றி கருத்து தெரிவிக்கையில் வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையை பாதிப்பதால் பொதுத் திறைசேறி குறைநிரப்பி மதிப்பீட்டை முன்மொழிவதற்கு அனுமதிக்காது என்று அவர் கூறினார். உள்ளூர் வங்கியாளர்களிடமிருந்து கடன் பெற்றுக்கொள்ளுமாறு அல்லது பொதுத் திறைசேறியின் அனுமதியுடன் ஒரு செலவுத் திலைப்பிலிருந்து மற்றுமொரு செலவுத் தலைப்பிற்கு நிதியினை மாற்றிக்கொள்ளுமாறு குழுவின் தவிசாளர் அறிவுறுத்தினார்.

அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அப்பிரச்சினைகள் தொடர்பில் அவர்களால் முன்வைக்கப்படும் தீர்வுப் பொறிமுறைகள் அடங்கிய அறிக்கையொன்றை சபைக்கு சமர்ப்பிக்குமாறு கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் அமைச்சின் உத்தியோகத்தர்களை வேண்டிக்கொண்டார். **(பின்னிணைப்பு III)**

***செலவுத் தலைப்பு– 167 - விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சு***

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச்செலவினம் | 72,096 | 161,754 | 105,000 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 59,658 | 66,069 | 74,000 |
| மூலதனச் செலவீனங்கள் | 12,438 | 95,685 | 31,000 |
| **167- விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சர்** | | | |
| மொத்தச்செலவினம் | 72,096 | 161,754 | 105,000 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 59,658 | 66,069 | 74,000 |
| மூலதனச் செலவீனங்கள் | 12,438 | 95,685 | 31,000 |

குழு, விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சின் 167 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்து அங்கீகரித்தது.

கடுகண்ணாவையில் இருந்து மாத்தளை வரை மோனோஇரயில் கருத்திட்டத்தையும் கண்டிக்கான அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிக்கான கருத்திட்டத்தினையும் துரிதப்படுத்துவதாக விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சர் குறிப்பிட்டார்.

கண்டி மாநகரத்தினுள் “மல்ரிமொடல்” போக்குவரத்துக் கருத்திட்டமொன்றினை நிர்மாணிப்பதாகவும் இதன்மூலம் வாகன நெரிசலைத் குறைக்கலாம் எனவும் சூழல் மாசடைதலையும் தடுக்கலாம் எனவும் விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

“கொஹாகொட குப்பை கருத்திட்டத்தினை” மனிதநேய முறையில் அமுல்படுத்தவதாக கௌரவ அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

குழு, கௌரவ அமைச்சர் மற்றும் அவரது அமைச்சினதும் நாட்டின் உயர்ச்சிக்கான செயற்பாடுகளை பெரிதும் பாராட்டியது.

***செலவுத் தலைப்புக்கள் – 108, 202 மற்றும் 308 தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு***

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச்செலவினம் | 12,927,368 | 13,041,762 | 13,530,800 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 12,503,939 | 12,307,582 | 13,157,800 |
| மூலதனச் செலவீனங்கள் | 423,429 | 734,180 | 373,000 |
| **108- தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்** | | | |
| மொத்தச்செலவினம் | 380,163 | 298,572 | 146,000 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 122,644 | 123,592 | 134,300 |
| மூலதனச் செலவீனங்கள் | 257,519 | 174,980 | 11,700 |
| **202- முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம்** | | | |

| | | | |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 127,474 | 137,855 | 150,700 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 97,124 | 100,655 | 91,000 |
| மூலதனச் செலவீனங்கள் | 30,350 | 37,200 | 59,700 |
| **308- தபால் திணைக்களம்** | | | |
| மொத்தச்செலவினம் | 12,419,731 | 12,605,335 | 13,234,100 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 12,284,171 | 12,083,335 | 12,932,500 |
| மூலதனச் செலவீனங்கள் | 135,560 | 522,000 | 301,600 |

குழு, தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 108, 202 மற்றும் 308 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்து அங்கீகரித்த்து.

குழு, ஒவ்வொரு பிரதான தபால் அலுவலகங்களினதும் தொடர்ச்சியான செலவினங்களைக் குறைப்பதற்காகவும் தபால் விநியோக முறையை துரிதப்படுத்துவதற்காகவும் "தபால் தரம்பிரித்தல் நிலையம்" ஒன்றை ஸ்தாபிக்கவேண்டுமென பரிந்துரை செய்தது.

குழு, கம்பஹ மாவட்டத்தில் உள்ள தபாலகத்தை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பிரதான தபாலகங்களில் இலவச "WiFi" மற்றும் குறுந்தகவல் சேவை (SMS) வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென பரிந்துரை செய்தது.

தற்போது பொலிஸ் திணைக்களத்தினால் உபயோகப்படுத்தப்படும் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியினை மீளச்சுவீகரித்து அதனை திணைக்களத்திற்கு வருமானம் ஈட்டித்தரும் விதமாக உபயோகிக்க வேண்டுமெனவும் பரிந்துரை செய்தது.

பெருந்தோட்டங்களின் தபால் விநியோகித்தை துரிதப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென பரிந்துரை செய்தது.

குழுவின் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட விடயங்களை செயற்படுத்துவதற்காக தாம் கௌரவ பிரதம அமைச்சருடன் கலந்துரையாடுவதாக தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார்.

முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சுக்கு போதியளவு வரவுசெலவு நிதி ஒதுக்கீடு இல்லாமையினால் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடுவதாக தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சவூதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் ஆலயத்தில் புறம்பானதோர் அலுவலகத்தை ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரிகர்களின் வசதிக்காக ஏற்பாடு செய்துகொள்வதில் தலையிடும்படி கௌரவ குழுவின் தவிசாளரை கௌரவ அமைச்சர் வேண்டிக் கொண்டார்.

குழு, அமைச்சரனிதும் அவரது அமைச்சுப் பணியாளர்கனிதும் செயற்பாடுகள் தொடர்பாக தனது பாராட்டைத் தெறிவித்துக்கொண்டது.

***செலவுத் தலைப்பு – 196 விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு***

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச்செலவினம் | 3,294,255 | 5,762,361 | 5,643,200 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 1,600,207 | 1,833,336 | 1,863,600 |
| மூலதனச் செலவீனங்கள் | 1,694,048 | 3,929,025 | 3,779,600 |
| **196- விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்** | | | |
| மொத்தச்செலவினம் | 3,294,255 | 5,762,361 | 5,643,200 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 1,600,207 | 1,833,336 | 1,863,600 |
| மூலதனச் செலவீனங்கள் | 1,694,048 | 3,929,025 | 3,779,600 |

குழு ,விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 196 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்து அங்கீகரித்தது.

தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் மற்றும் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களால் திட்டமிடப்பட்டுள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் அத்துடன் எதிர்காலத்தில் செயல்படுத்தப்படும் 'கனிமக் கொள்கை' ஆகியவற்றால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் மீது இந்த குழு முக்கியமாக கவனம் செலுத்துகிறது.

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை குழு கண்டறிந்து, தேவையான நிதி ஒதுக்கீட்டு விதிமுறைகளை எளிமையாக்குவதற்கு பரிந்துரைக்கின்றது. இது அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிகள் அத்துடன் NERD இன் ஏனைய முக்கிய திட்டங்கள் குறிப்பாக தொற்றுநோயற்ற நோய்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் என்பவனற்றை வெற்றிகரமாக தொடர்ந்து மேற்கொண்டு அவற்றை நிறைவு செய்வதற்கு வசதியளிப்பதாக அமையும். 'கனிமக் கொள்கையை' அமுல்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யுமாறு குழு பரிந்துரை செய்கிறது.

தேசிய அபிவிருத்தி தொடர்பாக NERD இன் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை குழு கண்டறிந்து தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் ஊடாக பொதுமக்கள் விழிப்புணர்வு தொடர்பில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யவதற்கு குழு பரிந்துரைக்கின்றது. மேலும் ஊடகங்களின் ஊடாக மாவட்ட மட்டத்திலும் கிராமப்புற பகுதிகளிலும் தொழில்நுட்பத்தை பரப்புவதற்கு அரசியல் மட்டத்திலான ஈடுபாடு தேவை என NERD இன் தலைவர் குறிப்பிட்டார்.

NERD இன் தொழில்நுட்பத்தின் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளை மேலும் கருத்தில் கொண்டு, அரசாங்க அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கையில்

குறிப்பாக பாலங்கள் நிர்மாணிக்கப்படும் போது NERD இன் எழுத்துமூல கருத்து ஒரு தேவைப்பாடாக இருக்கவேண்டும் எனக் குறிப்பிட்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றினை சமர்ப்பிப்பதற்கு குழு யோசனை தெரிவித்தது.

விஞ்ஞானிகளை ஊக்குவிப்பதற்காக முன்னர் இருந்ததைப் போன்று ஊக்கத்தொகை வழங்கவும் குழு பரிந்துரைக்கிறது. மேலும் அமைச்சின் பிரேரணைகளை ஆராய்ந்த குழு புதிய ஆராய்ச்சிகள் தொடர்பில் மேலதிக நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு விதந்துரைத்தது. (**பின்னிணைப்பு IV)**

***செலவுத் தலைப்புக்கள் – 101, 201 - புத்தசாசன அமைச்சு***

| ரூபா. '000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 2,018,144 | 3,022,813 | 1,462,955 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 1,264,888 | 2,000,256 | 711,645 |
| மூலதனச் செலவீனங்கள் | 753,256 | 1,022,557 | 751,310 |
| **101 - புத்தசாசன அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 871,718 | 1,679,468 | 903,970 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 162,732 | 712,361 | 207,360 |
| மூலதனச் செலவீனங்கள் | 708,986 | 967,107 | 696,610 |
| **201 - பௌத்த அலுவல்கள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 1,146,426 | 1,343,345 | 558,985 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 1,102,156 | 1,287,895 | 504,285 |
| மூலதனச் செலவீனங்கள் | 44,270 | 55,450 | 54,700 |

குழு ,புத்தசாசன அமைச்சின் 101 மற்றும் 201 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்து அங்கீகரித்தது.

72 நாடுகளிலிருந்து 742 சர்வதேச பிரதிநிதிகள் மற்றும் கண்கானிப்பாளர்களின் பங்கேற்பில் நடைபெற்ற 14 ஆவது ஐக்கிய நாடுகளின் வெசாக் தின நினைவு விழாவில் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் மற்றும் அண்மையில் நேபாளத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தால் ஏற்பட்ட அழிவு காரணமாக சிதைவுற்ற நேபாளத்தில் உள்ள ஒரு இந்து கோவில் புனரமைக்கப்பட்டதால் அமைச்சு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பாராட்டுக்குள்ளானதை குழு வரவேற்றது.

வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தின் கட்டுமான பணிகள் புத்தசாசன அமைச்சின் கீழ் வந்திருந்தால் சிறந்தது என குழு கருத்து தெரிவித்ததுடன் அது தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு சிபாரிசு செய்தது.

"பௌத்த விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர்கள்" எனும் அதிகாரிகள் பிரதேச செயலகத்தில் இருப்பதாகக் குறிப்பிட்ட கௌரவ அமைச்சர் அவர்கள் "'பௌத்த விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர்களின் வேலை விவரம்" பற்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிக்குமாறு பௌத்த விவகாரகங்களுக்கான ஆணையாளர் நாயகத்தைப் பணித்தார் (**பின்னிணைப்பு V**)

பௌத்தத்தைப் படிப்பதற்கான ஒரு புதிய உலகளாவிய போக்கு இருப்பதாகவும், அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அமைச்சு என்ற வகையில் நாம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன விளக்கினார்.

***செலவுத் தலைப்புக்கள் – 159, 203 - சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு***

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 548,071 | 2,848,533 | 1,024,477 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 252,914 | 866,963 | 512,507 |
| மூலதனச் செலவீனங்கள் | 295,157 | 1,981,570 | 511,970 |
| **159- சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 388,334 | 2,613,683 | 918,660 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 115,002 | 689,883 | 438,760 |
| மூலதனச் செலவீனங்கள் | 273,331 | 1,923,800 | 479,900 |
| **203- கிறிஸ்த்தவ சமய அலுவல்கள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 159,738 | 234,850 | 105,817 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 137,912 | 177,080 | 73,747 |
| மூலதனச் செலவீனங்கள் | 21,826 | 57,770 | 32,070 |

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் 159 மற்றும் 203 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் குழு ஆராய்ந்து அங்கீகரித்தது.

தற்போதைய நிலைமையை கருத்திற்கொள்ளும்போது 2020 ஆம் ஆண்டின்போதான இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் 7 மில்லியன் வருமானம் எனும் இலக்கானது யதார்த்தபூர்வமாக இல்லையென கௌரவ தாரக்க பாலசூரிய அவர்கள் குறிப்பிட்டார்கள் .

2015 ஆம் ஆண்டின் பின்னர் நல்லாட்சி காரணமாக எமது நாடு பற்றிய நல்லெண்ணம் மேம்பட்டுள்ளதையடுத்து நாட்டிலுள்ள மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு

நிலைமைகளை கருத்தில் கொள்ளும். அது மேற்குலக சுற்றுலா பயணிகளை அதிகளவில் கவர்ந்துள்ளது என தவிசாளர் விளக்கினார். வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஆதரவுடன் இந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகள் இருதரப்பிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலும் சுற்றுலாத்துறை தனியார் துறைகளின் கைகளில் தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். வெளி நாடுகளுக்கு விஜயம் செய்யும் அமைச்சர்கள் இலங்கை பற்றிய நல்லெண்ணத்தை ஊக்குவிக்க முயற்சிக்க வேண்டும் என்றும், வெளிநாட்டு அமைச்சு மற்றும் தூதரகங்கள் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதில் பாரிய பங்கினை வகிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு சுற்றுலா ஊக்குவிப்பு பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கும் படி தவிசாளர் அவர்கள் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. எசல வீரகோன் அவர்களுக்கு பணிப்புரை விடுத்தார் (**பின்னிணைப்பு VI**). திருகோணமலையை ஒரு மகிழ்ச்சியான கப்பல் பயணங்களுக்கான தளமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியத்தை தவிசாளர் வலியுறுத்தியுள்ளார்.

குழு ஆராயப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு பின்வருமாறு பரிந்துரைத்தது.

- வோட்டர்ஸ் எட்ஜ், பத்தரமுள்ள, அருகே உத்தேச நிலத்தில் சர்வதேச மாநாட்டு மண்டபம் ஒன்றினைத் தாபிப்பதற்கான சிறந்த இடம் எனும் விடயம் தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றினை சமர்ப்பித்தல்
- மாகாண மட்டத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கான திறன் மேம்படுத்தும் திட்டங்களை முன்னெடுத்தல்
- சுற்றுலா பயணிகளை மகிழ்ச்சியடையச் செய்யும் (இரவு சந்தைகள், திரையரங்குகள், சாகச சுற்றுலா போன்றவை) விடயங்களை மேற்கொள்ளுதல்.
- சுற்றுலாவிற்கான முக்கிய சூழலாக "கித்துல்கலயை" அடையாளம் கண்டு சுற்றுலாப்பயணிகளுக்கு வெளியேயான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியான இடத்தை உருவாக்குதல்
- வெளிநாட்டு மாணவர்களை (அரச தனியார் பங்குடமையின் கீழ்) ஈர்ப்பதற்காக ஸ்ரீலங்கா ஹோட்டல் பாடசலையை சர்வதேச மட்டத்தில் அபிவிருத்தி செய்தல்
- மடு தேவாலய பகுதி முழுவதும் நீர், துப்பரவேற்பாடு போன்ற தேவையான வசதிகளை வழங்குதல்
- தனியார் துறையுடன் இணைந்து திறம்பட சுற்றுச்சூழல் கொள்கைகளை ஊக்குவித்தல்

**செலவுத் தலைப்பு 140 - மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு**

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 1,284,094 | 4,367,886 | 3,748,375 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 189,124 | 335,376 | 348,375 |
| மூலதனச் செலவீனங்கள் | 1,094,970 | 4,032,510 | 3,400,000 |
| **140- மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 1,284,094 | 4,367,886 | 3,748,375 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 189,124 | 335,376 | 348,375 |
| மூலதனச் செலவீனங்கள் | 1,094,970 | 4,032,510 | 3,400,000 |

குழு, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் 140 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்து அங்கீகரித்து.

நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்வதிலும் மற்றும் பெருந்தோட்டத் துறையிலுள்ள மக்களுக்கு சில முக்கிய சேவைகளை வழங்குவதிலும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளை தற்போது கணிசமான நிதி நெருக்கடிகளை மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பழனி திகாம்பரம் அவர்கள் குறிப்பிட்டார்கள்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுடன் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் ஒருங்கிணைப்புடன், நாட்டின் பெருந்தோட்ட மக்களின் சில பிரச்சினைகளைக் தீர்த்துக்கொள்வதற்கு உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளிடையேயான உறவை வலுப்படுத்துவதற்கு குழுவின் தவிசாளர் விதந்துரைத்தார்.

பெருந்தோட்டத்துறை மக்களுக்கு காணிகளை விடுவிப்பு செய்யும் செயன்முறையினைத் துரிதப்படுத்துவதற்காக அமைச்சிக்கும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளைக்கும் இடையே முறையான ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும் எனக் குழு அவதானித்தது.

பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் உதவி அரசாங்க அதிபர்களுடன் சிறந்த உறவைப் பேணவேண்டும் என கௌரவ லக்ஷமன் செனவிரத்ன அவர்கள் யோசனை தெரிவித்ததுடன் தற்போது பாவனையில் இல்லாத காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் அல்லது நாட்டின் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றை சமர்ப்பிப்பதற்கு குழு விதந்துரைத்தது.

பெருந்தோட்டங்களில் கண்டி மற்றும் மாத்தளை எனும் பிரதேசங்களில் "அவுட்குரோவர்" நிகழ்ச்சித்திட்டம் தற்போது வெற்றிகரமாக நடைபெறுவதாக

கௌரவ ரவூப் ஹகீம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், ரங்கல, கண்டி போன்ற இடங்களில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் பரிந்துரைத்தார். தற்போது தோட்டப் பிரதேசங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பிற நாடுகளுக்கு செல்லுதல் பாரிய பிரச்சினையாக உள்ளதால் அவர்களை தக்கவைத்துக்கொள்ள இது ஒரு சிறந்த தீர்வாக அமையும். அது அடுத்த தலைமுறைக்கு அதிக வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் உதவும்.

கிராமங்களுக்கு இடையே சிறந்த இணைப்புகளை ஏற்படுத்துவதற்காக தற்போதுள்ள சாலைகளின் நிலைமைகளை மேம்படுத்துதல் மற்றும் தொலைவில் அமைந்துள்ள மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட தோட்டங்களுக்கு இலகு அணுகல் வசதிகளை வழங்குவதன் மூலமும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலமும் கிராமங்கள் மற்றும் தோட்டங்களுக்கிடையில் ஒருங்கிணைப்புகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குழுவின் தவிசாளர் தெரிவித்தார்.

தோட்டத் துறைகளில் காணப்படும் உள் வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விடயப் பரம்பலின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும் என கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்கள் தெரிவித்த யோசனைக்கு குழுவின் தவிசாளர் இணக்கம் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் துறை வைத்தியசாலைகளில் அரசாங்கத்தின் பங்கு 20 சதவீதம் மட்டுமே காணப்படுவதாகவும் அந்த வைத்தியசாலைகள் மாகாண சுகாதார அதிகார சபையின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும் என குழுவின் தவிசாளர் கருத்து தெரிவித்தார்

***செலவுத் தலைப்புக்கள் 145, 204, 232 & 326 சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு***

| ரூபா. '000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 22,007,886 | 19,781,971 | 11,425,912 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 6,106,453 | 6,892,746 | 8,278,162 |
| மூலதனச் செலவீனங்கள் | 15,901,433 | 12,889,225 | 3,147,750 |
| **145- சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 14,622,937 | 12,723,340 | 4,818,150 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 932,772 | 1,011,265 | 2,676,150 |
| மூலதனச் செலவீனங்கள் | 13,690,165 | 11,712,075 | 2,142,000 |
| **204- இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 226,806 | 244,548 | 249,110 |

| | | | |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவீனங்கள் | 131,703 | 149,898 | 154,460 |
| மூலதனச் செலவீனங்கள் | 95,103 | 94,650 | 94,650 |
| **232- சிறைச்சாலைகள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 6,898,740 | 6,539,744 | 6,066,694 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 4,792,326 | 5,467,744 | 5,170,594 |
| மூலதனச் செலவீனங்கள் | 2,106,414 | 1,072,000 | 896,100 |
| **326- சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 259,402 | 274,339 | 291,958 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 249,652 | 263,839 | 276,958 |
| மூலதனச் செலவீனங்கள் | 9,750 | 10,500 | 15,000 |

குழு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் 145,204,232 மற்றும் 326 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளை ஆராய்ந்து அங்கிகரித்தது.

புதிய வீடுகளை நிர்மாணித்தல், அகதி முகாம்களிலிருந்து சொந்த இடங்களுக்கு திரும்புபவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்தல், சிறிய நீர் தாங்கிகளை நிர்மாணித்தல், துப்பரவு ஏற்பாட்டு வசதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்தல், வாழ்வாதார உதவிகளை வழங்கல், கல்வித் துறைசார்ந்த அபிவிருத்தி, வீட்டுகளுக்கான மின்சார வசதிகள், காணிகள் இல்லாதவர்கள் தொடர்பில் காணிகளை கொள்வனவு செய்தல் போன்ற செயற்றிட்டங்கள் தொடர்பில் தவிசாளர் குறிப்பிட்டார்

ஏற்றுமதிச் சந்தை தொடர்பில் பனை உற்பத்திகளை ஊக்குவித்தல் ஆகிய விடயங்கள் பற்றி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் கௌரவ டி.எம். சுவாமிநாதன் அவர்கள் விளக்கமளித்தார்கள்.

2017 ஆம் ஆண்டு தொடர்பில் 160 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டபோதிலும் பல்லேகலே சிறைச்சாலைகள் கட்டிட தொகுதியின் நிர்மாணிப்புப் பணிகள் காலதாமதம் அடைதல் தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

சிறைச்சாலையின் உட்பகுதியின் பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனத்துடன் நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொண்டுவருவதால் இக் கருத்திட்டத்தின் பணிகள் மெதுவாக முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் அப் பணிகளை இரு வருடங்களுக்குள் பூர்த்தி செய்வதாகவும் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் (சிறைச்சாலைகள்) திரு.எச்.எம்.என்.சீ.தனசிங்க குறிப்பிட்டார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட 12000 பேர்களைச் சேர்ந்த வலது குறைந்தவர்கள் மற்றும் பெண்களின் நலனோம்புகை தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் விவசாயம் அவர்களின் வாழ்க்கைத் தொழிலாக அமைவதால் மன்னார் பிரதேசத்தில் நிலவிவரும் முக்கியமான பிரச்சினையான நீர் பற்றாக்குறைக்கான தீர்வொன்றை கண்டுபிடிக்குமாறு கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு நீர்த் தாங்கியை வழங்குவதற்காக (ஒரு கிராமத்துக்கு ஒரு தாங்கி வழங்கும் கருத்திட்டம்) நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் உதவியுடன் அக் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டுவருவதாக அவதானித்த குழு வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட்ட எல்லா மாவட்டங்களிலும் தங்கள் அலுவலகமொன்றை செயற்படுத்தி வருவதாகவும் சுயதொழில்கள் மற்றும் வேறு வர்த்தகங்கள் தொடர்பில் உதவியளித்துவருவதுடன் நீர், தையல் இயந்திரங்கள், பால்மாடுகள்,கோழிக் குஞ்சுகள் உட்பட்ட ஏனைய வசதிகள் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் குழு பாராட்டுத் தெரிவித்தது.

செலவுத் தலைப்புக்கள் 188 மற்றும் 189 இன் கீழ் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2.5 பிலியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு எவ்வத அடிப்படையும் இல்லாமல் வழங்கப்பட்டுள்ளது என்பதை அவதானித்த குழு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சிற்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் மாற்றுமாறு பொது திறைசேரறி உத்தியோகத்தர்களிடம் கோரிக்கை விடுத்தது.

விவசாயம் மற்றும் கடற்றொழில் தொடர்பில் வசதியளிப்பதற்காக யோத வாவி, இரனைமடு குளம் மற்றும் மகாதித்த மீன்பிடித் துறைமுக கருத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு போதிய நிலையில் இல்லையென்பதை குழு அவதானித்தது. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு நீர்த் தாங்கியை வழங்குவதற்காக கருத்திட்டம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழு வேண்டிக்கொண்டது. **(பின்னிணைப்பு VII)**

முப்படையைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் விதவைகள் மற்றும் யுத்தநிலை காரணமாக விதவைகளானவர்களின் நலனோம்புகை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார். நீர் தாங்கிகள் கருத்திட்டம் மற்றும் முப்படையைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் விதவைகள் மற்றும் யுத்தநிலை காரணமாக விதவைகளானவர்களின் தற்கால விபரங்களை ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட குழுக்களுக்கிடையே தொழில் இல்லாப் பிரச்சினைக்குத் தீர்வாக அகதி முகாம்களில் வாழ்ந்துவரும் இளைஞர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொடுக்குமாறும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சுடன் கலந்தாலோசித்து NVQ மட்டத்திலான சாரதி அனுமதிப்பத்திர முறைமை ஒன்றினை ஆரம்பிக்குமாறு குழு யோசனை தெரிவித்தது.

**2018 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அமைச்சுகளின் செலவுத் தலைப்புக்கள் பற்றி ஆராய்வதற்கான பாராளுமன்ற விசேட குழு**

**நிகழ்ச்சித் திட்டம்**

| திகதி | நேரம் | தலைப்புக்கள் | அமைச்சு |
|---|---|---|---|
| வெள்ளிக்கிழமை 2017.11.17 (1ஆம் நாள்) | மு.ப.10.00- மு.ப.11.30 | 165 | தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் அமைச்சு |
| | மு.ப.11.30- பி.ப.1.00 | 157, 236 | தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு |
| | பி.ப.2.000- பி.ப.3.30 | 194 | தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு |
| | பி.ப.3.30- பி.ப.5.00 | 167 | விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சு |
| சனிக்கிழமை 2017.11.18 (2ஆம் நாள்) | மு.ப.10.00- மு.ப.11.30 | 108, 202, 308 | தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு |
| | மு.ப.11.30- பி.ப.1.00 | 196 | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு |
| | பி.ப.2.00- பி.ப.3.30 | 101, 201 | புத்தசாசன அமைச்சு |
| வியாழக்கிழமை 2017.11.23 (3ஆம் நாள்) | மு.ப.10.00- மு.ப.11.30 | 159, 203 | சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு |
| | மு.ப.11.30- பி.ப.1.00 | 140 | மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு |
| | பி.ப.2.00- பி.ப.3.30 | 145,204,232, 326 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு |

# 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவின் கூட்டக் குறிப்புக்கள்

## குழுவின் கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள்

முதலாவது கூட்டம் - 2017 நவம்பர் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

இரண்டாவது கூட்டம் - 2017 நவம்பர் 18 ஆம் திகதி சனிக்கிழமை

மூன்றாவது கூட்டம் - 2017 நவம்பர் 23 ஆம் திகதி வியாழக்கிழமை

நான்காவது கூட்டம் - 2017 நவம்பர் 30 ஆம் திகதி வியாழக்கிழமை

### 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவின் முதலாவது கூட்டக் குறிப்புகள்

(2017 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 11.30 மணிக்கு

**சமூகமளித்தோர்**

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ தாரக்க பாலசூரிய

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதியின் பிரதானியும் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

திரு.டிக்கிரி கே.ஜயதிலக்க, உதவிச் செயலாளர் நாயகம்

1. அறிவித்தலின் பிரகாரம் கூட்டம் கூடியது.

2. குழுவின் நடப்பெண் 03 அங்கத்தவர்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென குழு தீர்மானித்தது.

3. அமைச்சுகளின் நிகழ்ச்சித்திட்ட வரைபு குழுவின் செயலாளரால் முன்வைக்கப்பட்டதுடன் அது குழுவில் ஆராயப்பட்டு சில திருத்தங்களுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்டது. அதற்கமைய பாராளுமன்றத்தால் குழுவிற்கு முன்வைக்கப்பட்ட அமைச்சுகளின் செலவுத் தலைப்புக்களை ஆராய்வதற்காக பின்வரும் திகதிகளில் கூட்டங்களை நடாத்துவதற்கு குழு இணக்கம் தெரிவித்தது.

   - 2017 நவம்பர் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.00 - பி.ப.5.00
   - 2017 நவம்பர் 18 ஆம் திகதி சனிக்கிழமை  மு.ப.10.00 - பி.ப.3.30
   - 2017 நவம்பர் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.00 - பி.ப.3.30

4. குழு, பின்வருமாறு தீர்மானங்களை மேற்கொண்டது.

   அ. குழுவில் விளக்கமளிப்பதற்காக முக்கியமாக சமூகமளிக்க வேண்டிய சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களையும் உத்தியோகத்தர்களையும் அழைத்தல்

   ஆ. நிதி அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்க உத்தியோகத்தர்களை அழைத்தல்

   இ. தமது அமைச்சுக்கள் பற்றி ஆராயப்படும் போது வருகை தருமாறு அவ்வமைச்சிக்களின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு அழைப்பு விடுத்தல்.

   ஈ. குழுவின் அங்கத்தவர்களுக்கு முன்னதாகவே பகிந்தளிப்பதற்குத் தேவையான சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் முன்னேற்ற அறிக்கைகளை மும்மொழிகளிலும் அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களுக்கு அறிவித்தல்

உ. பின்வரும் தலைப்புகளின் கீழ் சிறிய விளக்கமொன்றை குழுவிற்கு முன்வைக்குமாறு அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவித்தல்

- அமைச்சின் சுருக்கமான சுயவிவரம்
- 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்படவுள்ள செயற்பாடுகள் பற்றிய பட்டியல்
- 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு
- 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டம்.

குழு, பி.ப.12.15 மணிக்கு 2017 நவம்பர் 17ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

--------------------------

## 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவின் இரண்டாவது கூட்டம்

**2017, நவம்பர் மாதம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு**

**சமூகமளித்தோர் :**

கௌரவ ஜோன் அமரதுங்க (தவிசாளர்)
கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன
கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி
கௌரவ சி. சிறீதரன்
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

திரு. டிக்கிரி கே ஜயதிலக்க,உதவி செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

**சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:**

கௌரவ ஏ.எச்.எம். பௌஸி, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திருமதி நாலனீ அமரதுங்க, பணிப்பாளர்

திரு.ஆர்.ஏ.ரீ.ஏ.ரணவீர, பிரதிப் பணிப்பாளர்

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திருமதி டபிள்யூ.ஜீ.என்.மெனிக்கே, உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி

திருமதி கே.எல்.எம்.பீ.குணதிலக்க, கணக்காய்வு அத்தியட்சகர்

ஒத்திவைப்பின் பிரகாரம் கூட்டம் கூடியது. கௌரவ தவிசாளர் அவர்கள் முக்கிய விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பிரசன்னமாக இருப்பதனால் கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன

அவர்கள் பிரேரிக்க கௌரவ சி. சிறீதரன் அவர்கள் ஆமோதிக்க கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

**தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு**

**வருகைதந்த உத்தியோகத்தர்கள்**

திரு.சிவஞானசோதி, செயலாளர், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு

திரு.எஸ்.நாணாயக்கார, செயலாளர்.

திருமதி ஆர்.பீ.ஆர்.அரமசிங்க, மேலதிக செயலாளர்(அபிவிருத்தி)

திருமதி கே.எச்.ஜே. எல் சேணாரத்ன, சிரேட்ட உதவிச் செயலாளர்

திருமதி ரீ.என். குணவர்தன, கணக்காய்வாளர்

திரு. கே.நிகரில்கான்ந், உதவிச் செயலாளர்(அபிவிருத்தி)

திருமதி அநுசியான்தன், உதவிப் பணிப்பாளர், திட்டமிடல்

திரு.எம்.எஸ்.ஜயசிங்க, பணிப்பாளர் நாயகம், தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்கப் பணியகம்

திரு.என்.டி.ஹெட்டிஆரச்சி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்

திரு.எஸ்.ஏக்கநாயக்க, பிரதிப் பணிப்பாளர்

திரு.எஸ்.கே.ஜயசிங்க, பிரதிப் பணிப்பாளர்

திரு. மகேஸ் பியன்வில, அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு.ஏ.டி.பீ.எஸ்.சேணாரத்ன,அரச முகாமைத்துவ உத்தியோகத்தர்

குழு ,தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் 165 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்தது

| ரூபா. 000 | 2016 | 2017 மீள்வரவுசெலவுத் திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்த செலவினம் | 364,596 | 3,531,751 | 2,770,318 |
| மொத்த மீண்டுவரும் செலவினம் | 70,893 | 112,405 | 116,308 |
| மொத்த மூலதனச் செலவினம் | 293,703 | 3,419,346 | 2,654,010 |
| **165- தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர்** | | | |
| மொத்த செலவினம் | 364,596 | 3,531,751 | 2,770,318 |
| மொத்த மீண்டுவரும் செலவினம் | 70,893 | 112,405 | 116,308 |
| மொத்த மூலதனச் செலவினம் | 293,703 | 3,419,346 | 2,654,010 |

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் திரு.வீ.சிவஞானசோதி 2017 ஆம் ஆண்டின் நல்லிணக்க செயற்றிட்டத்தின் செயலாற்றுகை மற்றும் 2018 ஆம் ஆண்டின் உத்தேச திட்டம், அமைச்சின் சுயவிவரம் உள்ளிட்ட சமர்ப்பனம் ஒன்றை முன்வைத்தார். அவருடைய உரையின்போது கடந்த 2017 ஆம் ஆண்டு நான்கு நம்பிக்கைசார் துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி குறிப்பிட்டார். நல்லிணக்கக் கொள்ளைகள், உபாயங்கள், திட்டங்களை என்பனவற்றை வகுத்தல், தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டின் மேம்பாடு, மற்றும் இடைக்காலத்துக்குரிய நீதி வழங்கல், உண்மை நிலையைத் தேடுதல், வடு

அகற்றல், நீதி, தயார்நிலை, மறுநிகழ்வு மற்றும் பாகுபாடு எனும் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் அவர் குறிப்பிட்டார்.

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பிரேரணைகளில் பதினொரு மூலதத்துவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டதுடன் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் மாற்றுத்திறனுடைய பெண்களின் தேவைகள் தொடர்பில் விசேட செயற்றிட்டம், வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம், நல்லிணக்கப்பாட்டை நோக்காகக் கொண்ட பொருளாதார வலுவூட்டுகை மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் என்பன தொடர்பில் விளக்கமளித்ததுடன் கிளிநொச்சியிலும் நெடுந்தீவிலும் பனை பதனிடும் இரண்டு நிலையங்களைத் தாபித்தல் மற்றும் கொழும்பு மற்றும் தம்புல்ல அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார மையத்துடன் இணைந்த வகையில் யாழ்ப்பாணத்தில் நவீன பொருளாதார மையமொன்ற ஏற்படுத்தல், காணாமல் போன நபர்களுக்கான அலுவலக தாபிப்பிற்கு உதவுதல் மாவட்ட நல்லிணக்க குழுவிற்கு உதவுதல், இலங்கை ஐரோப்பிய யூனியன் அபிவிருத்தி உதவி நிலையத்தை வலுப்படுத்தல், மைலிடி மீனவத் துறைமுகம், கடற்கரை பொறியியல் கற்கை நல்லிணக்கை நோக்காகக் கொண்ட பாரியளவில் முன்னுரிமை வழங்கக்கூடிய வீதித் திட்டங்கள், தேசிய ஒற்றுமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் என்பன எமது பிரதான மூலதத்துவங்கள் ஆகும்.

நாட்டின் அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்க்கும் குழுக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் கேள்வி எழுப்பினார். அது தொடர்பில் மேதகு சனாதிபதி, கௌரவ இராஜாங்க அமைச்சர் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் பற்றிய பணியகத்தின் தலைவர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க ஆகியோர் அது தொடர்பில் ஆர்வத்துடன் செயற்பட்டுவருவதாக திரு.சிவஞானசோதி குறிப்பிட்டார். நிபுணத்துவர்களின் பங்களிப்புடன் கூடிய நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும் அதனை அமைச்சின் செயற்பாட்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கும் எதிர்ப்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே ஒருங்கிணைப்பு மற்றும் மத சமத்துவம் உறுதி செய்யப்பட வேண்டும் என கௌரவ எஸ்.ஸ்ரீதரன் அறிவுறுத்தியுள்ளார். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்டில்லையெனவும் வடக்கைச் சேர்ந்த மக்களுக்கு காணி, சட்டம் மற்றும் நீதி தொடர்பில் பாரிய பிரச்சினைகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார அலுவல்கள் பற்றி ஆராய்வதற்கு முன் தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சு இன மற்றும் மத பிரச்சினைகளை தீர்த்துவைத்தல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் குறிப்பிட்டார்கள். இன அல்லது மத பிரச்சினைகள் ஏதும் பதிவாகியுள்ளதாவென கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் கேள்வி எழுப்பியபோது, சில மாவட்டங்களில் சிறு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பதிலளிக்கப்பட்டது. பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக்கொள்வதற்காக மதத் தலைவர்கள், பொலிஸ் பிரிவு, ஓய்வுபெற்ற நீதிபதிகள், ஓய்வுபெற்ற அதிபர்கள் ஆகியோரைக் கொண்ட கீழ் மட்டத்திலான குழுவான மாவட்ட மட்டத்திலான நல்லிணக்க குழுக்களைத் தாபித்தல் தொடர்பில் மேதகு சனாதிபதி அவர்கள் முயற்சிசெய்வதாக குறிப்பிடப்பட்டது. வறியவர்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்கு அவர்களை பொருளாதார நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடச்

செய்வது முக்கியமானதெனவும் அவர்களுக்கு நிதி வசதிகள் அளிக்கப்பட வேண்டுமெனவும் திரு சிவஞானசோதி குறிப்பிட்டார்.

தொழில் இல்லாமை, வறுமை பற்றிய பிரச்சினைகள் நிலவிவருவதாகவும் சில கமத்தொழில் நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில்கள் இன்னமும் ஸ்தம்பிதமடைந்த நிலையில் இருப்பதாகவும் கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன் குறிப்பிட்டார். தொழில் இல்லாப் பிரச்சினை பெருமளவில் இருந்துவருக்கிறபோதிலும் சில வெளிநபர்கள் அப்பிரதேசங்களில் தொழில்களை பெறுகிறார்கள் என அவர் குறிப்பிட்டார். ஆகவே அப்பிரதேச மக்கள் தொடர்பில் கமத்தொழில் வர்த்தகம்,தொழிற்சாலைகள் மற்றும் அரசாங்க தொழில்வாய்ப்புகளை உருவாக்குமாறும் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் அதே வேளை இருக்கும் தொழிற்சாலைகளை திறக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். வட மாகாணத்தில் முதலீட்டு சந்தர்ப்பங்களை ஆரம்பித்து வாழ்க்கை வழிகளை அமைப்பதுடன் முதலீட்டில் அக்கரையுடைய முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் திட்டங்களை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ ஜோன் அமரதுங்க அமைச்சுக்கு தெரிவித்தார். இப் பிரதேசத்த்தில் உள்ள சிறு தீவுகளை பயன்படுத்தி சுற்றுலாத்துறை கைத்தொழிலை மேம்படுத்தல் மிகவும் பொருத்தமானதென அவர் மேலும் தெரிவித்தார்.

அதேபோல் இப்பிரதேசத்தில் வீதி கட்டமைப்பு, பாடசாலை அபிவிருத்தி எனும் செயற்றிட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் ஊடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முதலீடு செய்வதற்காக முதலீட்டாளர்களை ஊக்குவிக்க முடியுமெனவும் கௌரவ சி. சிறீதரன் அவர்கள் யோசனை தெரிவித்தார்கள்.

நாட்டின் எதிர்காலமானது ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கமும் தொடர்பில் நாம் மேற்கொளுளம் முயற்சிகளின் மீது தங்கியிருப்பதாக கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் வலியுறுத்தினார்கள்.

குழு ,தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செலவுத் தலைப்பு 165 க்கான மதிப்பீட்டை ஆராய்ந்து அங்கீகரித்தது.

மு.ப. 11.30

**சமூகமளித்தோர்:**

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி
கௌரவ சி. சிறீதரன்
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக்க , பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

**சமூகமளித்திருந்த ஏனைய உறுப்பினர்கள்:**

கௌரவ சீ.யோகேஸ்வரன்.

**பொதுத் திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திருமதி. நளனி அமரதுங்க, பணிப்பாளர், தேசிய வரவுசெலவு திணைக்களம்.
திரு. ஆர்.ஏ.ரீ.ஏ. ரணவீர, பிரதிப் பணிப்பாளர், தேசிய வரவுசெலவு திணைக்களம்

**கணக்காய்வாளர் திணைக்களத்திலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திருமதி டபிள்யூ. ஜீ. என். மெனிக்கே, உதவி கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வாளர் திணைக்களம்.

திருமதி கே. எல். எம். பி. குணத்திலக்கே, கணக்காய்வு கண்காணிப்பாளர், கணக்காய்வாளர் திணைக்களம்.

*தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு.*

**சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திரு. டபிள்யூ.எம்.டி.ஜீ. விக்கிரமசிங்க,செயலாளர், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சசு

திரு. கே.ஏ. திலக்கரத்ன, மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி)

திரு. எம்.கே. முஹைஸ், சிரேஷ்ட உதவி செயலாளர் (மொழி உரிமைகள்

திரு.டி.பி.ஜி.பிரதீப் பிரதம கணக்காளர்

திருமதி. பி.எம். சுதர்சனி பீரிஸ், பணிப்பாளர் (திட்டமிடல்

திருமதி. எல்.கே.ஏ.எஸ். குணசேகர, தலைமை உள்ளக கணக்காய்வாளர்

திரு. ரஞ்சித் விமலசூரிய, பணிப்பாளர்

திருமதி. டி.ஏ.ஜீ.என். சுரன்ஜி, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)

திரு. என். டீ. கலன்சூரிய, பிரதம கணக்காளர், அரசகரும மொழிகள் திணைக்களம்

திரு. சமிந்த மஹலேக்கம், உதவி ஆணையாளர்

திரு.ரஞ்சித் உயாங்கொட, தலைவர், அரச கரும மொழி ஆணைக்குழு.

திரு. பிரசாத் ஆர்.ஹேரத், பணிப்பாளர் நாயகம், மொழிக்கற்கைகள் மற்றும் பயிற்சிகளுக்கான தேசிய நிறுவனம் (NILET)

திரு. ஏ.எம்.ஜீ.யூ. அபேக்கோன், நிருவாக உத்தியோகத்தர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு

திருமதி. என்.எம். வீரக்கோன், உதவி ஆய்வு உத்தியோகத்தர், அரசகரும மொழிகள்

ஒத்திவைத்தலின் பிரகாரம் குழு கூடியது. குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

குழு, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் 157 மற்றும் 236ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது.

| ரூபா. 000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 587,787 | 1,063,390 | 762,570 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 422,422 | 527,299 | 524,670 |
| மூலதனச் செலவீனங்கள் | 165,365 | 536,091 | 237,900 |
| **157- தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் அரச கரும மொழிகள் அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 452,107 | 895,408 | 609,305 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 327,391 | 392,667 | 385,405 |
| மூலதனச் செலவீனங்கள் | 124,715 | 502,741 | 223,900 |

**236- அரச கரும மொழிகள் திணைக்களம்**

| | | | |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 135,680 | 167,982 | 153,265 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 95,031 | 134,632 | 139,256 |
| மூலதனச் செலவீனங்கள் | 40,649 | 33,350 | 14,000 |

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயலாளர் திரு.டபிள்யூ. எம்.பி.ஜீ. விக்கிரமசிங்க அவர்கள் 2017 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம் மற்றும் 2018ஆம் ஆண்டுக்கான இலக்கு ஆகியவற்றை தெளிவுபடுத்தி சமர்ப்பணம் ஒன்றைச் செய்தார்.

கௌரவ ஜே. எம். ஆனந்தகுமாரசிறி அவர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்துப் பேசிய தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் பணிப்பாளர் திரு.ரஞ்சித் விமலசூரிய அவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தின் கீழ் நுண்நிதிக் கடன் திட்டக் கம்பனிகளை பதிவுசெய்வதற்காக தற்போதுள்ள சட்டம் திருத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என கூறினார். இது தொடர்பான மக்கள் விழிப்புணர்வை ஊடகங்கள் மூலமாக செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மேலும் அவர் தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலமாக செயற்படுத்தப்படும் நுண்நிதிக்கடன் திட்ட நடவடிக்கை தொடர்பாக தனது கருத்தை முன்வைத்துப் பேசிய கௌரவ சி.சிறிதரன் அவர்கள் கடனை மீளச்செலுத்துவதிலுள்ள பிரச்சனையால் தற்கொலை விகிதம் அதிகரித்துள்ளதெனவும் இதில் வடகிழக்கைச் சேர்ந்த மக்களே மிகவும் பாதிப்படைந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார். கௌரவ உறுப்பினர் அவர்கள் இந்த நடவடிக்கைகளை வேகப்படுத்தவேண்டுமென அமைச்சை வேண்டிக்கொண்டார்.

நுண்நிதிக்கடன் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியோடு இணைந்து அமைச்சைச் சார்ந்த அலுவலர்களை பயிற்றுவிப்பதாக திரு.டபிள்யூ .எம்.பீ.ஜீ. விக்கிரமசிங்க அவர்கள் குறிப்பிட்டார்.

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி அவர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்து, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) திரு.கே. ஏ.திலகரத்ன அவர்கள், அரச அலுவலர்கள் மற்றும் அரச சார்பற்ற அலுவலர்கள் ஆகியோரின் மொழித்திறமைப் பரீட்சை பற்றி விளக்கிப்பேசினார்.

குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் இலங்கையர்கள் மத்தியில் தேசிய மொழிகள் தகைமையை மேம்படுத்துவதனை வேகப்படுத்தவேண்டுமென குறிப்பிட்டார். அமைச்சு தேசிய மொழிகளை மேம்படுத்த புதிய தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்த வேண்டுமென கௌரவ தாரக்க பாலசூரிய அவர்கள் ஆலோசனை பகர்ந்தார்.

குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு “தமிழ் தலைப்பு மும்மொழி அகராதி” மற்றும் “சிங்களத் தலைப்பு மும்மொழி அகராதி” பிரதிகளை வழங்குமாறு அமைச்சின் செயலாளரை வேண்டிக்கொண்டார்.

கௌரவ சி.சிறிதரன் அவர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்கு தேசியமொழிக் கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (NILET) பணிப்பாளர் நாயகம் திரு. பிரசாத் ஆர்.ஹேரத் அவர்கள் பதிலளித்துப் பேசுகையில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான மொழிக்கற்கைப் பாடநெறிகள் தொடர்பாக விபரித்தார்.

குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மொழிப்பயிற்சி வகுப்புக்களை பாராளுமன்ற அமர்வு தினங்களில் நடாத்தப்படவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

அரசாங்க நிறுவனங்களின் பெயர்ப்பலகைக்கான நிதி ஒதுக்கீட்டு ஏற்பாடுகள் முறைமை தொடர்பாக கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி அவர்கள் வினவினார். தேசியமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக திரு.டபிள்யூ.எம்.பீ.ஜீ. விக்கிரமசிங்ஹ அவர்கள் விளக்கமளித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளுக்கும் அரச நிறுவனங்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்கையில் உள்ளூர் அலுவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் மொழிப்பிரச்சனையைத் தவிர்க்கலாம் என கௌரவ சி.சிறீதரன் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படவேண்டுமெனவும் பாடசாலைகளில் தேசியமொழி கொள்கையை அமுல்படுத்துவதற்கு நிகழ்சிச்த்திட்டமொன்றினை வகுக்கவேண்டுமெனவும் இது தேசியமொழியினை ஊக்குவிப்பதற்குச் சிறந்த வழியாகுமெனவும் விதந்துரைத்தார்.

குழு, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் 157 மற்றும் 236 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்து அங்கீகரித்தது.

**பி.ப. 2.00**

***<u>சமூகமளித்தோர்:</u>***

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

திரு. டிக்கிரி கே ஜயதிலக்க,உதவி செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

**<u>திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

திரு.ஜே.எம்.எச். பண்டா, தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்

**<u>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

திரு. ஜீ.எச்.டி.தர்மபால, பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
திருமதி கே.ஆர்.டி.மெனிக்கே, கணக்காய்வாளர் அத்தியட்சகர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

அறிவித்தலின் பிரகாரம் கூட்டம் கூடியது. கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

***தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு***

**தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள்**

**வருகைதந்த உத்தியோகத்தர்கள்:**

திரு. வசந்த தேசப்பிரிய (செயலாளர்) தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

திருமதி எஸ்.கன்னங்கர, (மேலதிக செயலாளர்-நிர்வாகம்)

திருமதி எஸ்.என்.ஹபுஆரச்சி, (பிரதான கணக்காளர்)

திரு. வருன சிரி தனபால (சிரேட்ட உதவிச் செயலாளர்)

திரு.எஸ்.கே.பட்டேபொல, (உதவிப் பணிப்பாளர்-திட்டமிடல்)

திருமதி சித்ராங்கனீ முபாரக்,(தலைவர்) தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை

திரு.அஜித் மதுரப்பெரும , (பிரதான உத்தியோகத்தர்-பதில் கடமை )

திரு.ஜகத் செனவிரத்ன, (கணிகாணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் தலைவர்) திரு.பீ.ஜீ.குமாரசிங்க, (தலைவர்) இலங்கை ரெலிகொம்

திரு.கேஏ.கே.பெரேரா,கூட்டு வர்த்தக பிரதானி (நிருவன மற்றும் மொத்த)

குழு, தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 194 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்தது.

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 995,714 | 17,622,994 | 2,270,142 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 130,629 | 210,203 | 214,142 |
| மூலதனச் செலவீனங்கள் | 865,085 | 17,412,791 | 2,056,000 |
| **194- தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 995,714 | 17,622,994 | 2,270,142 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 130,629 | 210,203 | 214,142 |
| மூலதனச் செலவீனங்கள் | 865,085 | 17,412,791 | 2,056,000 |

தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் திரு. வசந்த தேசப்பிரிய, அமைச்சின் செயல்திறன் பற்றிய விளக்கத்தை வழங்கினார். 2017 ஆம் ஆண்டு தொடர்பில் 17 பில்லியன் ரூபாய்களை அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளனர் எனவும் 2 பில்லியன் ரூபாய் பெறுமதியான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். 2018 ஆம் ஆண்டு தொடர்பில் 4 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு நடத்திய த.தொ.க. திட்டங்களின் முன்னேற்றம் வெற்றிகரமாக இல்லை எனத் தெரிவித்த கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள் இந்த தோல்விக்கான காரணம் என்னவென்பதையும் வினவினார். பொருளாதார முன்னேற்றம் குறைவாக உள்ளதென்பதை தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் ஏற்றுக்கொள்கின்றார் என்றும், இப்போது 10 சதவிகிதம் மட்டுமே காணப்படுகின்ற இந்த திட்டங்களில் 50 சதவிகிதம் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட கருத்திட்டத்தினால் நாட்டுக்குக் கிடைக்கும் இறுதி விளைவு என்னவாக இருக்கும் என கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர்

இந்தத் திட்டத்தின் காரணமாக இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சர்வதேச தரப்படுத்தல்களின் நல்ல தரத்தை கொண்டிருப்பதாக தெரிவித்தார். இந்த அமைப்புகளில் பொதுமக்களின் குறைவான கோரிக்கை காரணமாக இந்தத் துறையின் வளர்ச்சி தடைப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குடிமக்களின் தனிப்பட்ட தரவிற்கான பொதுவான தரவு தளங்களின் பெறுதலை விளக்கும்படி கௌரவ. தாரக்க பாலசூரிய அவர்கள் செயலாளரைக் கேட்டுக் கொண்டார். கிட்டத்தட்ட 40 சேவைகள் தொடர்பில் ஒத்துழைக்கும் லங்கா கேட் போன்ற ஒரு அமைப்பு இருப்பதாக செயலாளர் தெரிவித்தார். சுங்கத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற பாரிய அரச நிறுவனங்கள் இந்த முறைமைகளைப் பயன்படுத்துவதில்லை என்பதோடு, இது பொதுவான தளத்தை உருவாக்குவதற்கான நோக்கில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள் நடாத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் தொடர்பாக அமைச்சிக்களுக்கிடையேயான நடவடிக்கைகளுக்கு சுறுசுறுப்பான செயற்பாட்டை வழங்குவதற்காக கௌரவ ஜனாதிபதியினால் தலைமைத்துவம் வழங்கப்படவிருக்கின்ற அனர்த்த முகாமைத்துவ சபை போன்ற குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு குழுவின் தவிசாளர் பரிந்துரைத்தார். தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் அதிகாரியிடம் கௌரவ மயந்த திஸாநாயக்க பின்வரும் கேள்விகளைக் கேட்டுள்ளார்:

1. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள் இனால் செயற்படுத்தப்படும் 3 திட்டங்களைத் தவிர ஏனைய திட்டங்களின் மோசமான முன்னேற்றத்திற்கான காரணம் (50% குறைந்த)என்ன?

2. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள் எப்போது புதிய பிரதான நிறைவேற்று அதிகாரியை ஆட்சேர்ப்பு செய்யவுள்ளது.

3. வருவாய் நிருவாக முகாமைத்துவ தகவல் திட்டத்தின் நிலை என்ன?

குறைந்த செயற்றிறன் கொண்ட செயற்றிட்டங்களைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைளின் செயற்றிட்டங்களை முன்னேற்றுவதற்கான சில செயற்பாட்டு திட்டங்கள் இருப்பதாகவும் தகவல் தொழிநுட்பவியல் திட்டங்கள் தொடர்பில் ஒதுக்கப்பட்ட நிதியை சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு மட்டும் பயன்படுத்தும் படி அமைச்சுக்களைக் கட்டாயப்படுத்தும்படி பொதுத் திறைசேறிக்கு அவர்கள் முன்மொழிந்தனர் எனவும் குறிப்பிட்டார்.

புதிய பிரதான நிறைவேற்று அலுவலரை நியமிப்பதற்கான பணிகள் நடைபெறுவதாக தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள் இன் தலைவர் திருமதி சித்ராங்கினி முபாரக் அவர்கள் குறிப்பிட்டார்.

வருவாயை நிர்வகித்தல் முகாமைத் தகவல் திட்டம் தொடர்கிறது என்றும் அது 2018 மார்ச் மாதம் முடிக்கப்படவுள்ளதாகவும் தலைவர் திருமதி சித்ராங்கினி முபாரக் தெரிவித்தார். நிதி சிக்கல்களின் காரணமாக விற்பனையாளர்களுக்கு சரியான நேரத்தில் பணம் செலுத்த முடியாமல் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குழுவின் தவிசாளர், அரச சார்பற்ற விற்பனையாளர்களுக்கான திட்டங்களை ஒதுக்கீடு செய்வதை குறைப்பதற்கும் திறந்த டெண்டர்களை வழங்குவதற்கும், மறுப்பு தெரிவிக்கும் முதல் உரிமையினை ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் பரிந்துரை செய்ததுடன் இது சிறந்த விலையினைப் பொருந்திய பின் எந்த அரசாங்க நிறுவனத்திற்கும் டெண்டர்களை

வழங்குவது தொடர்பில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள் க்கு உதவும் எனவும் குறிப்பிட்டார்.

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள் யினால் வரையப்பட்ட தகவல் முறைமைத் தரத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளருக்கு கௌரவ மஹிந்த சமரசிங்க அறிவுறுத்தியுள்ளார். பின்னர் அது தேசிய தரமாக கருதப்பட முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இலவச Wi-Fi மண்டலங்கள் மற்றும் கூகிள் லூன் திட்டம் பற்றி தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளரிடம் குழுவின் செயலாளர் வினவினார். நாடு முழுவதும் 30,000 இலவச Wi-Fi மண்டலங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது என செயலாளர் தெரிவித்தார். 860 அரச நிறுவனங்கள் அதிவேக ஒப்டிகல் ஃபைபர் இணைப்புக்களால் வலுவூட்டப்படவுள்ளதாகவும் அந்த நிலையங்களில் 2000 Wi-Fi மண்டலங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். நாடு முழுவதும் காணப்படும் அனைத்து 14000 கிராம சேவகர் பிரிவுகளிலும் 2 இலவச Wi-Fi மண்டலங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டதுடன் எந்தவொரு சூழ்நிலையிலும் 4G கவரேஜை உறுதி செய்தல் கூகிள் லூன் திட்டத்தின் ஊடாக எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிதிப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு குறைநிரப்பி மதிப்பீட்டை முன்மொழிவதற்கான அமைச்சின் முடிவு பற்றி கருத்து தெரிவிக்கையில் வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையை பாதிப்பதால் பொதுத் திறைசேறி குறைநிரப்பி மதிப்பீட்டை முன்மொழிவதற்கு அனுமதிக்காது என்று அவர் கூறினார். உள்ளூர் வங்கியாளர்களிடமிருந்து கடன் பெற்றுக்கொள்ளுமாறு அல்லது பொதுத் திறைசெறியின் அனுமதியுடன் ஒரு செலவுத் திலைப்பிலிருந்து மற்றுமொரு செலவுத் தலைப்பிற்கு நிதியினை மாற்றிக்கொள்ளுமாறு குழுவின் தவிசாளர் அறிவுறுத்தினார்.

கௌரவ மயந்த திஸாநாயக்க அவர்களின் கேள்விக்கு பதிலளித்த தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் அவ்வாறான எந்தவொரு பெரிய வெளிநாட்டு முதலீடும் இல்லை என்று குறிப்பிட்டார். ஆனால் 5G தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி செய்வதற்கு எரிக்சன் மற்றும் ஹவாய் போன்ற சில பன்னாட்டு தொலைத்தொடர்பு விற்பனையாளர்கள் உதவி செய்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் சில மாதங்களுக்குள் சர்வதேச தரத்திலான புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட தரவுத் தளமொன்றை பிட்டபன்ன பிரதேசத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதாக ரெலிகொம் நிறுவனத் தலைவர் திரு. பீ.ஜீ.குமாரசிங்க குறிப்பிட்டார்.

அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அப்பிரச்சினைகள் தொடர்பில் அவர்களால் முன்வைக்கப்படும் தீர்வுப் பொறிமுறைகள் அடங்கிய அறிக்கையொன்றை சபைக்கு சமர்ப்பிக்குமாறு கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை தெரிவித்தார்கள். **(பின்னிணைப்புIII)**

தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செலவுத் தலைப்பு -192 க்கான மதிப்பீடு குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.

மு.ப. 3.30 மணிக்கு

**சமூகமளித்தோர்:**

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ தாரக்க பாலசூரிய

திரு. டிக்கிரி கே. ஜயதிலக்க , பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

**<u>சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:</u>**
கௌரவ (டாக்டர்) சரத் அமுனுகம, விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சர்

**<u>பொதுத் திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**
திரு. எச்.ஏ.வீ.பீ.ஹப்புகம,பணிப்பாளர்,

**<u>கணக்காய்வாளர் திணைக்களத்திலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**
திருமதி டீ.வீ.சந்திரலதா, உதவி கணக்காய்வாளர் நாயகம்

**<u>சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**
திரு.டீ. நாணாயக்கார, செயலாளர், விசேட பணிப்பொறுப்புக்கள் அமைச்சு
திருமதி. என்.கே. அபேரத்ன, மேலதிகச்செயலாளர்
திருமதி. எஸ்.டீ.எல்.ஆர். சரோஜினி, தலைமைக் கணக்காளர்
திருமதி. ஜீ.ஏ.ஜீ.ரி. கணேபொல, உள்ளகக் கணக்காய்வாளர்

ஒத்திவைத்தலின் பிரகாரம் குழு கூடியது. குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

குழு, விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சின் 167 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது.

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 72,096 | 161,754 | 105,000 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 59,658 | 66,069 | 74,000 |
| மூலதனச் செலவீனங்கள் | 12,438 | 95,685 | 31,000 |
| **167- விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 72,096 | 161,754 | 105,000 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 59,658 | 66,069 | 74,000 |
| மூலதனச் செலவீனங்கள் | 12,438 | 95,685 | 31,000 |

விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சின் செயலாளர் திரு.டீ. நாணாயக்கார அவர்கள் 2017 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம் மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான இலக்கு ஆகியவற்றை தெளிவுபடுத்தி சமர்ப்பணம் ஒன்றைச் செய்தார். அவர், இவ் அமைச்சின் கீழ் எவ்வித திணைக்களங்களோ நிறுவனங்களோ வருவதில்லையெனினும் தமது விசேட கருத்திட்டங்களை ஏனைய அமைச்சுக்களின் கீழ்வரும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியோடு அமுல்ப்படுத்துவதாகக் கூறினார்.

அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆராச்சி மற்றும் அபிவிருத்தி கிளையின் செயற்பாடுகள் பற்றி கௌரவ தாரக்க பாலசூரிய வினவினார். அமைச்சின் ஆராச்சி மற்றும் அபிவிருத்திக்கான

உத்தேச செலவினம் 10 மில்லியனாக இருப்பினும் ஐம்பது மில்லியன் ரூபா குறைந்த பட்ச ஒதுக்கீடாக இவ் வரவுசெலவு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளதென செயலாளர் குறிப்பிட்டார்.

கௌரவ மயந்த திசாநாயக்க அவர்களின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த கௌரவ சரத் அமுனுகம அவர்கள், கடுகண்ணாவையில் இருந்து மாத்தளை வரை மோனோஇரயில் கருத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிட்டதோடு திட்டமிட்டபடி அதிவேகப் பாதையின் நிர்மாணப்பணிகள் அடுத்துவரும் வருடங்களில் நடைமுறைப்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டார்.

கண்டி மாநகரத்தினுள் சூழல் மாசடைவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென கௌரவ மயந்த திசாநாயக்க ஆலோசனை வழங்கினார். இப்பிரச்சனைக்கு திருப்திகரமான தீர்வாக மல்ரிமொடல் போக்குவரத்துக் கருத்திட்டமொன்றினை நகர அபிவிருத்தி அதிகாரசபை வகுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். இச் சூழல் மாசடைவுக்கு பிரதான காரணியாக இருப்பது “குஹாகொட குப்பைத்தோட்டம்” தான் எனவும் இதற்காக மீள்சுழற்சி கருத்திட்டமொன்றினைத் திட்டமிட்டுள்ளதாக கௌரவ அமைச்சர் எடுத்துரைத்தார்.

குழுவின் செயலாளர் மகிந்த சமரசிங்ஹ அவர்கள் கௌரவ அமைச்சர் மற்றும் அவரது அமைச்சினதும் செயற்பாடுகளையும் துணிபுகளையும் மெச்சினார்.

குழு, விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சின் 167 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்து அங்கீகரித்தது.

குழு பி.ப. 4.00 மணிக்கு 2017 நவம்பர், 18 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பம்/ டிக்கிரி கே. ஜயதிலக்க

குழுவின் செயலாளர்

------------------------------

## 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவின் மூன்றாவது கூட்டம்

2017, நவம்பர் மாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

**சமூகமளித்தோர்:**

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ லக்ஷ்ன் செனவிரத்ன
கௌரவ அஜித் மான்னப்பெரும
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

**சமூகமளிக்க முடியாமைக்கான முன்னறிவித்தல்.**

கௌரவ.ஜே.எம்.ஆனந்த குமாரசிறி

திரு. டிக்கிரி கே. ஜயதிலக்க , பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகமும் (சட்டவாக்கம்) குழுவின் செயலாளரும்

திரு. ஜகத் ஜயவீர ஆராச்சிகே, பணிப்பாளர், சட்டவாக்க சேவைகள்.

**<u>சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:</u>**

கௌரவ அப்துல் ஹலீம், தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்.

**<u>சமூகமளித்த பொதுத் திறைசேரி உத்தியோகத்தர்கள்.</u>**

திருமதி.வை.பீ.சுமனா,பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம்.
திருமதி. பீ.எம்.டீ.என். பாலசூரிய, பணிப்பாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்.
திருமதி. எஸ்.எம்.டீ.டீ. சமரக்கோன், உதவிப்பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்.

**<u>சமூகமளித்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள்.</u>**

திரு.ஜீ.எச்.டீ. தர்மபால, பிரதிக்கணக்காய்வாளர், கணக்காய்வாளர் திணைக்களம்.
திருமதி.கே.ஆர்.ரீ. மெனிக்கே, கணக்காய்வு கண்காணிப்பாளர், கணக்காய்வாளர் திணைக்களம்

***தபால் , தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு***

**<u>சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

திரு. டீ.ஜீ.எம்.வீ. ஹப்பு ஆராச்சி, செயலாளர், தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு
திருமதி.ஏ.எஸ்.எம்.எஸ். மகாநாம, மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
திருமதி. எஸ்.ஏச்.ஏ.என்.டீ. அபேரத்ன, மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி
திரு.கே.ஏ.எஸ்.சேனாதீர, மேலதிகச் செயலாளர், (விசேட தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு)
திரு.ஈ.வை.பீ.சொய்சா, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
திருமதி.வீ.எஸ்.கொடிப்பிலி ஆராச்சி, தலைமைக் கணக்காளர்
திரு. ஏ.டீ.எஸ்.சோமசிறி, பணிப்பாளர் (திட்டமிடல்)
திரு.கே.எல்.டீ.என்.பியால், கணக்காளர் (கொடுப்பனவு)
திரு. டீ.எல்.பீ.ஆர். அபேரத்ன, தபால்மாஅதிபர், தபால் திணைக்களம்.
திரு. டபிள்யூ.ஏ.ஜீ. விக்கிரமசிங்க, உதவித் தபால் அதிபர் (செயற்பாடுகள்
திரு. எச்.டீ.சீ.பீ. குணசேகர, உதவித் தபால் அதிபர் (நிர்வாகம்), தபால் திணைக்களம்.
திருமதி.ஏ.கேமலதா, தலைமைக் கணக்காளர்
திருமதி.ஜே.ஏ.டீ.சீ.ஏ கணேபொல, பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
திரு.எம்.ஆர்.எம். மலிக், பணிப்பாளர், முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.
திரு. எம்.ஆர். நசீமுல் ஹக், உதவிச் செயலாளர்
திரு.எம்.ஏச். நூறுல் அமீன், உதவிப்பணிப்பாளர், (பதில்)

ஒத்திவைத்தலின் பிரகாரம் குழு கூடியது. குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

குழு, தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 108, 202 மற்றும் 308 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது.

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 12,927,368 | 13,041,762 | 13,530,800 |

| | | | |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவீனங்கள் | 12,503,939 | 12,307,582 | 13,157,800 |
| மூலதனச் செலவீனங்கள் | 423,429 | 734,180 | 373,000 |
| **108- தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 380,163 | 298,572 | 146,000 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 122,644 | 123,592 | 134,300 |
| மூலதனச் செலவீனங்கள் | 257,519 | 174,980 | 11,700 |
| **202- முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 127,474 | 137,855 | 150,700 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 97,124 | 100,655 | 91,000 |
| மூலதனச் செலவீனங்கள் | 30,350 | 37,200 | 59,700 |
| **308- தபால் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 12,419,731 | 12,605,335 | 13,234,100 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 12,284,171 | 12,083,335 | 12,932,500 |
| மூலதனச் செலவீனங்கள் | 135,560 | 522,000 | 301,600 |

தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. டீ.ஜீ.எம்.வீ. ஹப்பு ஆராச்சி, 2017ஆம் ஆண்டின் முன்னேற்றம் மற்றும் 2018ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டம் என்பன தொடர்பாக சமர்ப்பணம் ஒன்றைச் செய்தார்.

குழு, ஒவ்வொரு பிரதான தபால் அலுவலகங்களினதும் தொடர்ச்சியான செலவினங்களைக் குறைப்பதற்காகவும் தபால் விநியோக முறையை வேகப்படுத்துவதற்காகவும் “தபால் தரம்பிரித்தல் நிலையம்” ஒன்றை ஸ்தாபிக்கவேண்டுமென ஆலோசனை வழங்கியது.

கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்கள் கம்பஹ மாவட்டத்தில் உள்ள தபாலகங்களை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆலோசனை வழங்கினார். மேலும், கௌரவ உறுப்பினர் பிரதான தபாலகங்களில் இலவச “Wi-Fi” மற்றும் குறுந்தகவல் சேவை (SMS) வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென ஆலோசனை வழங்கினார்.

கம்பஹ நகரத்தில் காணப்படும் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான வெற்றுக்காணியில் தனியார் துறையுடன் இணைந்து ஒரு புதிய கட்டடத்தைக் நிர்மாணிப்பதன் மூலம் திணைக்களத்திற்கு வருமானம் ஈட்டக் கூடியதாக இருக்குமென கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்கள் முன்மொழிந்தார்கள். சுப்பமாக்கர் கட்டடத்தொகுதியொன்றினை நிர்மாணித்து அதில் ஒரு பகுதியை தபால் செயலகத்தின் பாவனைக்காக எடுப்பதன் மூலமும் மிகுதியை வாடகைக்கு விடுவதன்மூலமும் இதனை நடைமுறைப்படுத்தலாம் எனவும் அவர்கள் கேட்டார். குழுவின் செயலாளர் கௌரவ மகிந்த சமரசிங்ஹ அவர்கள் இது தொடர்பாக ஒரு அமைச்சரவைப் பத்திரமொன்றை முன்வைக்குமாறு ஆலோசனை வழங்கினார்.

தற்போது பொலிஸ் திணைக்களத்தினால் உபயோகப்படுத்தப்படும் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியினை மீளப்பெற்று மாடிவீட்டுத்திட்டமொன்றை நிர்மாணிப்பதன் மூலம் திணைக்களத்திற்கு வருமானம் ஈட்டலாம் எனவும் கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்கள் மேலும் கருத்துரைத்தார்.

ருவன்வெல்ல பெருந்தோட்டங்களின் நிலவுகின்ற ஈனத்தனமான தபால் சேவையின் காரணமாக மக்கள் பெரிதும் கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர் என கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன அவர்கள் குறிப்பிட்டார். தபால் திணைக்களத்தின் பிரதித் தபால்மா அதிபர் (செயற்பாடு) திரு.டபிள்யூ.ஏ.ஜீ.விக்கிரமசிங்க அவர்கள், பெருந்தோட்டங்களில் தபால்

விநியோகிப்பதில் பிரச்சனைகள் காணப்படுவதாலும் இதனைத் தவிர்ப்பதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக தெளிவுபடுத்தினார்.

குழுவின் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட விடயங்களை செயற்படுத்துவதற்காக தாம் கௌரவ பிரதம அமைச்சருடன் கலந்துரையாடுவதாக தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார்.

போதியளவு வரவுசெலவு நிதி ஒதுக்கீடு இல்லாமையினால் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு முகங்கொடுக்க நேரிடும் பிரச்சனைகள் தொடர்பாக தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இதே பிரச்சனை பௌத்த, கிறிஸ்தவ, மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சுக்களும் முகங்கொடுப்பதாக கௌரவ குழுவின் தவிசாளர் குறிப்பிட்டார்.

சவூதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் ஆலயத்தில் புறம்பானதோர் அலுவலகத்தை ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரிகர்களின் வசதிக்காக ஏற்பாடு செய்துகொள்வதில் தலையிடும்படி கௌரவ குழுவின் தவிசாளரை கௌரவ அப்துல் ஹலீம் அவர்கள் வேண்டிக் கொண்டார்.

குழுவின் தவிசாளர் கௌரவ மகிந்த சமரசிங்ஹ அவர்கள் அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பாக தமது பாராட்டினை முன்வைத்தார்.

குழு தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 108, 202 மற்றும் 308 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்து அங்கீகரித்தது.

மு.ப. 11.30

**சமூகமளித்தோர்:**

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ அஜித் மான்னப்பெரும
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

திரு. டிக்கிரி கே ஜயதிலக்க,உதவி செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

**சமூகமளித்த கௌரவ அமைச்சர்கள்**

கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

கௌரவ லக்ஷமன் செனவிரத்ன, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர் அமைச்சு

**திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

செல்வி வை.பீ.சுமனா,பணிப்பாளர், தேசிய வரவு செலவுத் திணைக்களம் திரு.ஆர்.எம்.டி.என். பாலசூரிய, பணிப்பாளர்,முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திரு. ஜீ.எச்.டி.தர்மபால, பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
திரு. டபிள்யூ ஆனந்த, பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
திரு.எஸ்.எம்.டி.டி.சமரகோன், உதவிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

**விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

திரு. உதய ஆர். செணவிரத்ன, செயலாளர், விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

திரு.ஜே.எம்.மங்களதிஸ்ஸ, இராஜாங்க செயலாளர், விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சு

திருமதி டி.நந்தனீ சமரவிக்கிரம, மேலதிக செயலாளர், (முகாமைத்துவமும் நிதி)

திரு.எச்.எம்.பீ.சீ.ஹேரத், மேலதிக செயலாளர், (தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)

திரு.எம்.சீ.கமகே, பிரதான உள்ளக கணக்காளர், (உள்ளக கணிக்காய்வு)

திருமதி ஹிமாலி டபிள்யூ.கே.அதாவுதகே,பணிப்பாளர்,(உள்ள அலுவல்கள்)

திருமதி சுரேகா ஹேவகே, பிரதான உதவிச் செயலாளர் ,

திருமதி டபிள்யூ.ஏ.என்.குலதுங்க, பணிப்பாளர் (திட்டமிடல்)

திருமதி நசீமா அஹமட், பணிப்பாளர்,(திட்டமிடல்)

செல்வி.பீ.ஜீ.ஆர்.எச்.குமாரி, பணிப்பாளர்(TT)

திரு பீ.எம்.தர்மதிலக்க, பணிப்பாளர்- பதில் கடமை (தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி)

திரு. பீ.என்.எஸ்.கே.குணவர்தன, தலைவர், இலங்கை கட்டளைகள் நிறுவகம்

திருமதி நயணா சத்தரசிங்க, பணிப்பாளர் நாயகம்

செல்வி ருவனி வயோமி ரூபசிங்க, பணிப்பாளர்(நிதி)

பொறி.டபிள்யூ.ஜே.எல்.எஸ்.பந்னாந்து, தலைவர், இலங்கை தேசிய பொறியியலாளர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

பொறி.டி.டி.ஆனந்த நாமல், பணிப்பாளர் நாயகம்

திருமதி டி.வீ.எஸ்.பெரேரா, பணிப்பாளர்(நிதி)

கலாநிதி சீ.மகேஸ் எதிரிசிங்க, ஆணையாளர் , இலங்கை முதலீட்டாளர் ஆணைக்குழு

திரு. என்.என்.டபிள்யூ.தொலவத்த, பணிப்பாளர்

செல்வி டி.அனூஷா சரத்சந்திர, உதவிப் பணிப்பாளர்(நிதி)

பேராசிரியர் ஏ.விக்கிரமசிங்க, தலைவர், தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவனம்

பேராசிரியர், எஸ்.எச்.பீ.பீ.கருணாரத்ன, பணிப்பாளர்

பேராசிரியர் சிறிமலீ பர்னாந்து, தலைவர், தேசிய விஞ்ஞான மன்றம்

கலாநிதி ஜயந்தா வத்தேவிதானகே, பணிப்பாளர் நாயகம்-பதில் கடமை

திருமதி பிரியங்கா பமுநேந்திர, கணக்காளர்

பேராசிரயர் தம்மிக்க ஏ தந்திரீகொட, தலைவர், நவீன தொழில்நுட்பம் பற்றிய ஆதர் சீ கிலாக் நிறுவனம்

பொறி.சனத் பனாவன்னகே, பணிப்பாளர் நாயகம்

திரு. சன்ஜீவ வீரப்பெரும, சிரேட்ட பிரதிப் பணிப்பாளர்(நிதி)

திரு. நிரோசன் பெரேரா, தலைவர், கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்

கலாநிதி ஜீ.ஏ.எஸ்.பிரேமகுமார, பணிப்பாளர் நாயகம்

திரு.நீல் வீரகோன், கணக்காளர்

திரு.எல்.எச்.டி. பந்துசோம, பணிப்பாளர்-பதில் கடமை, இலங்கை ஏற்றங்கீகார சபை

திரு.டி.ஜீ.புஷ்பகுமார, பிரதிப் பணிப்பாளர், (நிதி மற்றும் நிருவாகம்)

திருமதி மனீசா சீ ராஜபக்ஷ, பதவிநிலை செயலாளர் , தேசிய ஆராய்ச்சி மன்றம்

செல்வி ஏ.ஈ.கே. தயாரத்ன, கணக்காளர்-பதில் கடமை

கலாநிதி முதிதா லியனகெதர, பணிப்பாளர், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்

திருமதி ஜீ.சீ.குமாரீ பீரிஸ், பிரதிப் பணிப்பாளர், (நிதி மற்றும் நிருவாகம்)

பேராசிரியர் அஜித் த அல்விஸ், கருத்திட்டப் பணிப்பாளர் , விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்குநர் ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்புச் செயலகம்

கலாநிதி சச்சி பனாவல, கள நிபுணர்

திருமதி கே.பீ.கே.கோரலகம, பிரதிப் பணிப்பாளர், கோள்மண்டலக் காட்சிக்கூடம்

திரு.அனில் பர்னாந்து, தலைவர்-நிதி, , சிலின்டெக் தனியார் கம்பனி

திரு. ஹரேன் த சில்வா விஜேரத்ன, பதவியணி உத்தியோகத்தர்

**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் வரவு செலவு மதிப்பீட்டு தலைப்பு 196 குழுவினால் ஆராயப்பட்டது.**

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 3,294,255 | 5,762,361 | 5,643,200 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 1,600,207 | 1,833,336 | 1,863,600 |
| மூலதனச் செலவீனங்கள் | 1,694,048 | 3,929,025 | 3,779,600 |
| **196- விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 3,294,255 | 5,762,361 | 5,643,200 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 1,600,207 | 1,833,336 | 1,863,600 |
| மூலதனச் செலவீனங்கள் | 1,694,048 | 3,929,025 | 3,779,600 |

2017 ஆம் ஆண்டில் அமைச்சின் முன்னேற்றம் பற்றியும் 2018 ஆண்டிற்கான இலக்கு திட்டம் பற்றியும் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திரு. உதய ஆர். செனவிரத்ன சமர்ப்பனமொன்றை முன்வைத்தார்.

கோரிய தொகையை விட பாரிய நிதி ஒதுக்கீடு 2017 ஆம் ஆண்டு தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் இராஜாங்க அமைச்சர் கௌரவ லக்ஸ்மன் செனவிரத்ன தெரிவித்தார். அவ்வாறான அமைச்சுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது நாட்டின் தொழில்நுட்பத் துறையின் அபிவிருத்தியை கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய அம்சங்களெனவும் உயர் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் இன்றி அபிவிருத்தியை எட்ட முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERD) அறிமுகப்படுத்தியுள்ள தொழில்நுட்பமானது கிராமப்புறங்களில் சிறிய பாலங்களை நிர்மாணிக்க மிகவும் சிறந்தது என்றும் மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்படும் "2000 பாலங்கள்" செயற்றிட்டம் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் உடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார். இது பற்றி பாராளுமன்றத்திற்கு பரிந்துரைக்க குழு இணக்கம் தெரிவித்தது.

GA மாநாட்டில் இது தொடர்பில் அறிமுக விளக்கமொன்றினை முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு வேண்டுகோள் விடுத்தார். எனினும், அமைச்சின் செயலாளர் ஏற்கனவே அதனை செய்துள்ளதாகக் குறிப்பிட்டு கிராமப்புற பாலங்களை பற்றிய தகவல்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் காணப்படும் அறிவானது போதிய விளம்பரம் இல்லாததன் காரணமாக சமூகத்தால் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுவதாக கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்கள் குறிப்பிட்டார். எனவே, அந்த நிறுவனத்தின் கண்டுபிடிப்பை ஊக்குவிக்க பொருத்தமான வழிகளை அடையாளப்படுத்துதல் மற்றும் அது பற்றிய பொது மக்களை விழிப்பூட்டும் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்களின் கேள்விக்கு பதில் அளித்த அமைச்சின் செயலாளர் முறைமையில் காணப்படும் சிக்கல் நிலைமை காரணமாக மேம்பாட்டு செயன்முறையானது பலவீனமாக உள்ளதெனவும் விழிப்புணர்வு செயற்பாடானது அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் உரிமையாளர் மீது பெரிதும் சார்ந்துள்ளது எனவும் அவர் மேலம் குறிப்பிட்டார்.

வழங்கல் பொறிமுறையின்றி இத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 50 மில்லியன் ரூபா வரை மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அரசாங்க கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த வருடத்துக்குள் விசேட பணிகளை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பார்ப்பதாகவும் இத் தொழில்நுட்பத்தை மாவட்ட மற்றும் கிராமிய பிரதேசங்கள் வரை விஸ்தரிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

விசேடமாக பாலங்களை நிர்மாணித்தல் உட்பட்ட அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி நிர்மாணிப்புகள் தொடர்பில் NERD நிறுவனத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை முன்வைக்குமாறு, கௌரவ அமைச்சரினால் நிறைவேற்றப்பட்டுள்ள பொறுப்பு முயற்சிகள் தொடர்பில் பாராட்டு தெரிவித்த கௌரவ மயந்த திசாநாயக்க கேட்டுக்கொண்டார்.

தேசிய விஞ்ஞான மன்றத்துக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் நீரிழிவு, டெங்கு போன்ற பரவாத நோய்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு போதிய நிலையில் இல்லையென, அமைச்சினால் தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் ஆய்வுக் கருத்திட்டம் தொடர்பில் கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் பேராசிரியர் சிறிமலீ பர்னாந்து குறிப்பிட்டார். நீரிழிவு நோயாளர் தொடர்பில் முக்கியமாக தேவைப்படும் தரவுத் தளமொன்றை தாபிக்கும் நோக்கத்துடன் பிரதான 3 கருத்திட்டங்களின் கீழ் நீரிழிவு பற்றிய நாடலாவிய ரீதியிலான ஆராய்ச்சிகள் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் செயற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். நீரிழிவு நோய் இலங்கையில் பாரிய

பிரச்சினையாக இருந்துவருவதால் அது பற்றி ஆய்வுகள மேலும் முன்னெடுக்குமாறு கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன கேட்டுக்கொண்டார்.

தமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் முக்கியமான ஆய்வுகள் பற்றி விளக்கமளித்த கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜீ.ஏ.எஸ்.பிரேமகுமார, அவர்கள் தயாரித்துவரும் கறுவா மூலிகை குழுசை மற்றும் கொத்தலஹிம்புட்டு பிஸ்கட் போன்ற அவர்களின் தரமான தயாரிப்புகள் பற்றி விளக்கமளித்தார். குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென குழு சிபாரிசு செய்தது.

குறிப்பிட்ட கருத்திட்டத்துக்கு தொடர்ந்து பல வருடங்களாக நிதி ஒதுக்கீடு செய்வதன் முக்கியத்துவம் மற்றும் அந் நிதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வழிகள் பற்றிய புரிந்துணர்வு திறைசேரிக்கு இருக்க வேண்டுமென செயலாளர் குறிப்பிட்டார். விளம்பர விடயம் தொடர்பில் கூடுதலான நிதி ஒதுக்கீடு களையும் ஆய்வுகள் தொடர்பில் போதியளவு நிதி ஒதுக்கீடுகளையும் வழங்குவதன் முக்கியத்துவத்தை குழு வலியுறுத்தியது. மேலும் குழுவினால் பாராளுமன்றத்திற்கு சிபாரிசு செய்ய முடியும் என்பதால் அதிகளவில் நிதி ஒதுக்கீடுகள் தேவைப்படும் ஆய்வுக் கருத்திட்டங்கள் பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளர் கேட்டுக்கொண்டார். **(பின்னிணைப்பு –IV)**

அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள எரிபொருள் கொள்கையைச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குமாறு அமைச்சின் செயலாளர் கேட்டுக்கொண்டார். விஞ்ஞானிகளை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு அரச பங்கின் வீதமொன்றை ஏற்கனவே செலுத்தப்பட்டவாறு செலுத்துவது பற்றி ஆராயுமாறு நிறுவனத் தலைவர் திரு. நிரோசன் பெரேரா கேட்டுக்கொண்டார். அதனை சிபாரிசில் சேர்த்துக்கொள்வதற்கு குழு இணக்கம் தெரிவித்தது.

தாம் Roscosmos (விண்வெளி செயற்பாடுகளுக்கான அரச கூட்டுத்தாபனம்) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் ரஷ்யாவைச் சேர்ந்த முக்கியமான சில பல்கலைக்கழகங்களுடன் ஆய்வு கருத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் விண்வெளி தொழில்நுட்பம், நெனோ விண்கள கருத்திட்டம் மற்றும் ஏனைய ஆய்வுகள் தொடர்பில் விளக்கமளித்த ஆத்தர் சீ கிளாக் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் திரு சனத் பனாவென்ன குறிப்பிட்டார். கோரப்பட்ட வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடான 380 மில்லியன் ரூபாயில் 50 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களை செயற்படுத்த முடியவில்லையெனவும் அவர் குறிப்பிட்டார். குறித்த விடயத்தை அறிக்கையிடுமாறு திறைசேரியின் உத்தியோகத்தர்களுக்கு குழு ஆலோசனை வழங்கியதுடன் அதனை அறிக்கையில் சேர்த்துக்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் குழுவின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

கௌரவ தவிசாளர், அமைச்சின் பொறுப்புக்கள் மற்றும் அதன் வெற்றி தொடர்பில் அமைச்சின் செயலாளன் பங்களிப்பு தொடர்பில் பாராட்டு தெரிவித்தார்.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் வரவு செலவு மதிப்பீட்டு தலைப்பு 196 குழுவினால் ஆராயப்பட்டது.

பி.ப 2.00

**<u>சமூகமளித்தோர்</u>**

கௌரவ லக்ஷமன் செனவிரத்ன (தவிசாளர்)
கௌரவ அஜித் மான்னப்பெரும
கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

திரு. டிக்கிரி கே ஜயதிலக்க,உதவி செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

**<u>சமூகமளித்திருந்த அமைச்சர்கள்</u>:**

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா, வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**<u>திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்</u>**

திருமதி தில்ருக்சி சமரகோன், உதவிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்

திருமதி ரீ.டி. பீ.லியனகே, பணிப்பாளர், தேசிய வரவு செலவுத் திணைக்களம்

திருமதி நிலூசா பாலசூசிய, பணிபாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

**<u>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்து சமூகமளித்த உத்தியோகத்தர்கள்</u>**

திரு.ஆர்.எம்.ஜே. ரத்நாயக்க,பிரதி கணக்காய்வாளர் தலமை அதிபதி

திரு.ஆர்.எம்.ரத்நாயக்க, உதவிக் கணக்காய்வாளர் தலமை அதிபதி

செல்வி டபிள்யூ.பீ.எல்.எஸ்.ஆர் பெரேரா,கணக்காய்வாளர் அத்தியட்சகர்.

ஒத்திவைப்பின் பிரகாரம் கூட்டம் கூடியது. கௌரவ தவிசாளர் அவர்கள் முக்கிய விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பிரசன்னமாக இருப்பதனால் கௌரவ அஜித் மான்னபெரும அவர்கள் பிரேரிக்க கௌரவ திருமதி துஸித்தா விஜேமான்ன அவர்கள் ஆமோதிக்க கௌரவ ஜோன் அமரதுங்க கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்கள் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

**புத்தசாசன அமைச்சு**

**<u>சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

திரு சந்திரபிரேம கமகே, செயலாளர், புத்தசாசன அமைச்சு

செல்வி ஜே.ஏ.ஏ.என்.கன்னங்கர, மேலதிக செயலாளர், (நிருவாகம்)

செல்வி ஹேமா தர்மவர்தன, மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)

செல்வி கே..கணேரு, பணிப்பாளர்(அபிவிருத்தி)

திரு.பீ.ஏ.பிரேமசிங்க, பணிப்பாளர், புனித பிரதேசங்கள்

திரு.ஆர்.எம்.டி.டி.ராஜபக்ச, பிரதான கணக்காளர்

செல்வி.ஜீ.என்.முணவீர, பிரதான உள்ளக கணக்காளர்

செல்வி யூ.எச்.கே. தேனவத்த, சிரேட்ட உதவிச் செயலாளர்

திரு.சீ.சீ.ஜயசிங்க, உதவிச் செயலாளர்

திரு. ஜே.எம்.கே.டி.ஜயசேக்கர,உதவிச் செயலாளர், (அபிவிருத்தி)

செல்வி ஆர்.ஏ.என்.பிரியதர்சனீ, உதவிப் பணிப்பாளர், (திட்டமிடல்)

திரு.நிமல் கொடாவெலகெதர, ஆணையாளர் நாயகம்-புத்தசாசன அலுவல்கள், புத்தசாசன அலுவல்கள் திணைக்களம்

திரு.ஜே.பீ.என்.சீ.ஜயகொடி, பிரதான கணக்காளர்

செல்வி எச்.என்.குமாரி, ஆணையாளர் நாயகம்

திரு.ஜீ.சந்திரசேன, பிரதான உள்ளக கணக்காளர்

திரு.ஆர்.எம்.என்.கே.எஸ்.கான்சன, உதவி ஆணையாளர்

செல்வி எல்.எச்.பீ. ரோசனீ, உதவி ஆணையாளர்(நிருவாகம்)

குழு ,புத்தசாசன அமைச்சின் 101 மற்றும் 201 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்தது.

| ரூபா. '000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 2,018,144 | 3,022,813 | 1,462,955 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 1,264,888 | 2,000,256 | 711,645 |
| மூலதனச் செலவீனங்கள் | 753,256 | 1,022,557 | 751,310 |
| **101 - புத்தசாசன அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 871,718 | 1,679,468 | 903,970 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 162,732 | 712,361 | 207,360 |
| மூலதனச் செலவீனங்கள் | 708,986 | 967,107 | 696,610 |
| **201 - பௌத்த அலுவல்கள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 1,146,426 | 1,343,345 | 558,985 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 1,102,156 | 1,287,895 | 504,285 |
| மூலதனச் செலவீனங்கள் | 44,270 | 55,450 | 54,700 |

புத்தசாசன அமைச்சின் செயலாளர் திரு. சந்திரபிரேம கமகே அவர்கள் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மற்றும் 2018 ஆம் ஆண்டின் உத்தேச திட்டம் தொடர்பில் சமர்ப்பனம் ஒன்றை முன்வைத்தார். 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கையினை விட 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வரையறைக்குள் அதிக திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலகங்களில் இருந்து இன்னும் பௌதீக மற்றும் நிதி சார் முன்னேற்றங்கள் கிடைக்கப்பெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

72 நாடுகளிலிருந்து 742 சர்வதேச பிரதிநிதிகள் மற்றும் கண்கானிப்பாளர்களின் பங்கேற்பில் நடைபெற்ற 14 ஆவது ஐக்கிய நாடுகளின் வெசாக் தின நினைவுக் கொண்டாட்ட விழாவில் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் குறிப்பிடத்தக்க கருத்துகள் மற்றும் பாராட்டுக்களை அமைச்சு பெற்றுக்கொண்டது. அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் ஏற்பட்ட அழிவு காரணமாக நேபாளத்தில் உள்ள சிதைவுற்ற இந்து கோவிலின் புனரமைப்பு பணிகள் அமைச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டமைக்காக அமைச்சு பாராட்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் 12333 பௌத்த கோவில்கள் உள்ளன என்றும் நிதியேற்பாடு தொடர்பில் 4000 கோரிக்கைகள் கிடைக்கின்ற போதிலும், ஒரு வருடத்திற்கு 500 கோரிக்கைகள் மட்டுமே பரிசீலிக்கப்பட முடியும் என்று புத்தசாசன அமைச்சின் செயலாளர் திரு. சந்திரபிரேம கமகே தெரிவித்தார். அதேபோல், நாட்டில் காணப்படும் 108 புனித தளங்களில் அடுத்த வருடத்தில் 60 தளங்களுக்கு மட்டுமே உதவ முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

2017 ஆம் ஆண்டு தொடர்பில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் என்ன எனும் கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் மூலதனத் திட்டத்தின் கீழ் அவர்கள் இதுவரை 70% அடைவுகளைப் பெற்றுள்ளதுடன் இது 2017 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 95% ஆகும் எனவும் அவர் குறிப்பிட்டார். குருநாகல் மாவட்டத்தில் அடுத்த அரச வெசாக் தின நினைவுக் கொண்டாட்டம் நடைபெறுவதால், 2018 ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்திற்கு மேலும் விசேட நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என திரு கமகே தெரிவித்தார்.

வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தின் கட்டுமான முன்னேற்றம் பற்றி கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்கள் வினவினார். நிர்மாணிக்கப்படும் பல மண்டபங்களில் ஒரு மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவுற்றுள்ளதாகவும் அது விரைவில் பயன்பாட்டிற்கு கிடைக்கும் எனவும் புத்தசாசன அமைச்சின் செயலாளர் திரு. சந்திரபிரேம கமகே குறிப்பிட்டார்.இந்த மாநாட்டு மண்டபம் புத்தசாசன அமைச்சின் கீழ் வந்திருந்தால் சிறந்தது என வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமான கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா அவர்களும் குழுவின் தவிசாளர் கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்களும் குறிப்பிட்டார்கள் .இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவுள்ளதாக புத்தசாசன அமைச்சின் செயலாளர் திரு. சந்திரபிரேம கமகே குறிப்பிட்டார் .மேற்படி விடயத்தினை அந்த அறிக்கையின் பரிந்துரையில் உள்ளடக்குமாறு குழு கோரியது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உள்ள புனித தளங்கள் தொடர்பிலான கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சின் கீழ் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படினும் தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுவதனால் சில சூழ்நிலைகளில் சிரமங்களை எதிர்கொண்டிருப்பதாக திரு. சந்திரசோம கமகே விளக்கினார். அதற்கிணங்க நகர அபிவிருத்தி அதிகாரசபையானது தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தலைத் திருத்துவதற்கு சிபாரிசு செய்துள்ளது என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

சில தரப்பினரால் அழிக்கப்பட்டு வருகின்ற பண்டைய புத்த கோவில்களைப் பற்றி கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன கேள்வி எழுப்பியதையடுத்து பயிற்சி பெற்ற பின்னர் தன்னார்வ தொண்டர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்வதாக பௌத்த விவகாரகங்களுக்கான ஆணையாளர் நாயகம் திரு. நிமல் கொட்டவெலகெதர அவர்கள் கருத்து தெரிவித்திருந்தார்.

தற்போது அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும் படி வனசீவராசிகள் அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமான கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா அமைச்சின் செயலாளரையும் பௌத்த விவகாரகங்களுக்கான ஆணையாளர் நாயகத்தையும் பணித்தார். பௌத்த விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர்கள்' எனும் அதிகாரிகள் பிரதேச செயலகத்தில் இருப்பதாகக் குறிப்பிட்ட கௌரவ அமைச்சர் அவர்கள் 'பௌத்த விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர்களின் வேலை விவரம்' பற்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிக்குமாறு பௌத்த விவகாரகங்களுக்கான ஆணையாளர் நாயகத்தைப் பணித்தார். (**பின்னிணைப்பு V)**

பௌத்தத்தைப் படிப்பதற்கான ஒரு புதிய உலகளாவிய போக்கு இருப்பதாகவும், அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அமைச்சு என்ற வகையில் நாம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன விளக்கினார்.

குழு ,புத்தசாசன அமைச்சின் 101 மற்றும் 201 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்து அங்கீகரித்தது.

குழு, பி.ப. 3.00 மணிக்கு 2017 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.00 வரை ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பம்/ டிக்கிரி கே. ஜயதிலக்க

குழுவின் செயலாளர்

-----------------------------

**2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவின் நான்காவது கூட்டம்**

**2017, நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு**

**சமூகமளித்தோர்:**

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ ரஊப் ஹகீம்
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி
கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன
கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

திரு. டிக்கிரி கே ஜயதிலக்க,உதவி செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

**<u>திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

செல்வி டி.எஸ்.எம்.கொஸ்தா, பணிப்பாளர், தேசிய வரவு செலவுத் திணைக்கம்

செல்வி அனா தாபரேரா, உதவிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்

திரு.ஆர்.ஏ.எல்.உதயகுமார, உதவிப் பணிப்பாளர், தேசிய தொழில் முயற்சிகள் திணைக்களம்

**<u>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்து சமூகமளித்த உத்தியோகத்தர்கள்</u>**

செல்வி யகந்தவல, பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி , கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

திரு. எஸ் சன்ஜீவ, கணக்காய்வு அத்தியகடசகர்,

ஒத்திவைத்தலின் பிரகாரம் கூட்டம் கூடியது. குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள்.

**சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு**

**<u>சமூகமளித்த உத்தியோகத்தர்கள்:</u>**

திரு. எசல வீரகோன், செயலாளர், சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு
திருமதி டபிள்யூ தீப்தி பர்னாந்து, மேலதிக செயலாளர், (நிருவாகம் மற்றும் வழங்கல்)

திரு.பீ.எம்.விதான, பதவிநிலை பணிப்பாளர்(சுற்றுலா செயலணி) திரு.எஸ்.எல்.எம்.ஹஷீம், பணிப்பாளர்-அபிவிருத்தி

திரு.கே.எம்.சீ.கே.பண்டார, தலைமை கணக்காளர்

திருமதி டி.ஏ.சுணந்தா பியசீலி, தலைமை உள்ளக கணக்காய்வாளர்

திருமதி உமா நிரன்ஜனன், பணிப்பாளர்-திட்டமிடல்

திருமதி கே.டி.டி.பீரிஸ், உதவிப் பணிப்பாளர்-திட்டமிடல்

திரு.ஜீ.டி.பீ.முணிதாச, உதவிப் பணிப்பாளர்-திட்டமிடல்

திருமதி பிரசாதிக்கா பஸ்நாயக்க, உதவிப் பணிப்பாளர்-திட்டமிடல்

திரு.ஏ.ஆர்.குணவர்தன, பணிப்பாளர், கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்

செல்வி எம்.சீ.என் . பிந்து, உதவி பணிப்பாளர், கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்

திரு.காவன் ரத்நாயக்க, தலைவர், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை

திரு.பீ.எம்.கிரிஎல்ல, பணிப்பாளர் நாயகம்

திரு.ரசிக்க ஜயகொடி, ஆலோசனைகர்

திரு.சுநில் திஸாநாயக்க, தலைவர், இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

திரு.புத்திக்க ஹேவாவசம், பணிப்பாளர் நாயகம்

திரு.பீ.குலதுங்க, பிரதிப் பணிப்பாளர் நாயகம்

திரு. பிரேமா குரே, தலைவர், இலங்கை ஒருமைப்பாட்டு, நல்லிணக்க பணியகம்.

செல்வி அசினி தனுன்னகே, சிரேட்ட முகாமையாளர், ஒருமைப்பாட்டு, நல்லிணக்க பணியகம்.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் 159 மற்றும் 203 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் குழு ஆராய்ந்தது.

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 548,071 | 2,848,533 | 1,024,477 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 252,914 | 866,963 | 512,507 |
| மூலதனச் செலவீனங்கள் | 295,157 | 1,981,570 | 511,970 |
| **159- சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 388,334 | 2,613,683 | 918,660 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 115,002 | 689,883 | 438,760 |
| மூலதனச் செலவீனங்கள் | 273,331 | 1,923,800 | 479,900 |
| **203- கிறிஸ்த்தவ சமய அலுவல்கள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 159,738 | 234,850 | 105,817 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 137,912 | 177,080 | 73,747 |
| மூலதனச் செலவீனங்கள் | 21,826 | 57,770 | 32,070 |

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. எசல வீரகோன் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மற்றும் 2018 ஆம் ஆண்டின் திட்டம்

தொடர்பிலான விபரமான சமர்ப்பனம் ஒன்றை முன்வைத்தார்

அமைச்சின் செயற்பாடுகளில் தான் திருப்தியடைய வில்லை என கௌரவ. தாரக்க பாலசூரிய அவர்கள் குறிப்பிட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் அவர்கள் அடைவதற்கு உத்தேசித்துள்ள இலக்கு எதுவெனவும் அதை அவர்கள் எவ்வாறு அடையப்போகின்றார்கள் எனவும் வினாவினார்கள். அதிகமான கட்டுப்பாடுகள் சுற்றுலாத் துறையை மழுங்கடையச் செய்யும் எனவும் மேலும் அவர் சுட்டிக்காட்டினார்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் திரு. காவன் ரத்நாயக்க மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் திரு. பி.எம். கிரியெல்ல அவர்கள் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான மூலோபாயத் திட்டத்தை விளக்கினார்.

சுற்றுலாத்துறையின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான விதிகளின் அவசியத்தை வலியுறுத்திய திரு.கவன் ரத்நாயக்க அவர்கள் அத்துறையின் தரம் மற்றும் சேவை என்பன மேம்படுத்தப்படுதல் வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொண்டார். இந்த ஆண்டு நடைபெற்ற எதிர்ப்பு போராட்டங்கள், இயற்கை பேரழிவுகள் (வெள்ளம், டெங்கு காய்ச்சல் போன்றவை) சுற்றுலாத் துறையை மோசமாக பாதித்துள்ளது என்று அவர் தெரிவித்தார். உள்நாட்டு சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பற்றி திரு. பி.எம். கிரியெல்ல விளக்கினார்.

2015 ஆம் ஆண்டின் பின்னர் நல்லாட்சி காரணமாக எமது நாடு பற்றிய நல்லெண்ணம் மேம்பட்டுள்ளதையடுத்து நாட்டிலுள்ள மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு நிலைமைகளை கருத்தில் கொள்ளும் மேற்குலக சுற்றுலா பயணிகளை அதிகளவில் கவர்ந்துள்ளது என தவிசாளர் விளக்கினார். வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஆதரவுடன் இந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகள் இருதரப்பிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலும் சுற்றுலாத்துறை தனியார் துறைகளின் கைகளில் தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். வெளி நாடுகளுக்கு விஜயம் செய்யும் அமைச்சர்கள் இலங்கை பற்றிய நல்லெண்ணத்தை ஊக்குவிக்க முயற்சிக்க வேண்டும் என்றும், வெளிநாட்டு அமைச்சு மற்றும் தூதரகங்கள் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதில் பாரிய பங்கினை வகிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலாத் துறையின் பயிற்சி தொடர்பில் கௌரவ ஜே. எம். ஆனந்த குமாரசிரி அவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள சேவைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக தற்போதுள்ளதும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான வேலைத்திட்டம் பற்றி இலங்கை சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் தலைவர் திரு. சுனில் திசாநாயக்க விளக்கினார்.

கௌரவ ரவூப் ஹக்கீம் அவர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் இலங்கை கண்காட்சி மற்றும் சம்மேளனப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கான பொருத்தமான வேட்பாளரை தெரிவுசெய்திருப்பதாகவும், இது தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை கண்காட்சி மற்றும் சம்மேளனப் பணியகத்தின் தலைவர் திரு. பிரேம குரே குறிப்பிட்டார்கள்.

மேலும், BMICH தவிர இன்னுமொரு சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் தேவை தொடர்பில் கௌரவ ரவூப் ஹக்கீம் கூறினார். வோட்டர்ஸ் எட்ஜ் அருகே காணப்படும் நிலப்பகுதி இந்த நோக்கத்திற்கான சிறந்த இடமாக அமையும் எனவும் அவர் மேலும் முன்மொழிந்தார்

உள்நாட்டு சுற்றுலா ஊக்குவிப்பு பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கும் படி தவிசாளர் அவர்கள்

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. எசல வீரகோன் அவர்களுக்கு பணிப்புரை விடுத்தார். (**பின்னிணைப்பு VI**) திருகோணமலையை ஒரு மகிழ்ச்சியான கப்பல் பயணங்களுக்கான தளமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியத்தை தவிசாளர் வலியுறுத்தியுள்ளார்.

குழு ஆராயப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு பின்வருமாறு பரிந்துரைத்தது.

- வோட்டர்ஸ் எட்ஜ் அருகே உத்தேச நிலத்தில் மாநாட்டு மண்டபம் ஒன்றினைத் தாபிப்பதற்கான சிறந்த இடம் எனும் விடயம் தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றினை சமர்ப்பித்தல்
    - மாகாண மட்டத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கான திறன் மேம்படுத்துகை திட்டங்களை முன்னெடுத்தல்
    - சுற்றுலா பயணிகளை மகிழ்ச்சியடையச் செய்யும் (இரவு சந்தைகள், திரையரங்குகள், சாகச சுற்றுலா போன்றவை) விடயங்களை மேற்கொள்ளுதல்.
    - சுற்றுலாவிற்கான முக்கிய சூழலாக "கித்துல்கலயை" அடையாளம் கண்டு சுற்றுலாப்பயணிகளுக்கு வெளியேயான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியான இடத்தை உருவாக்குதல்
    - வெளிநாட்டு மாணவர்களை (அரச தனியார் பங்குடமையின் கீழ்) ஈர்ப்பதற்காக ஸ்ரீலங்கா ஹோட்டல் பாடசலையை சர்வதேச மட்டத்தில் அபிவிருத்தி செய்வதல்
    - மடு தேவாலய பகுதி முழுவதும் நீர், துப்பரவேற்பாடு போன்ற தேவையான வசதிகளை வழங்குதல்
    - தனியார் துறையுடன் திறம்பட சுற்றுச்சூழல் கொள்கைகளை ஊக்குவித்தல்

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் 159 மற்றும் 203 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் குழு ஆராய்ந்து அங்கீகரித்தது

**மு.ப. 11.30**

**<u>சமூகமளித்தோர்:</u>**

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ ரஊப் ஹகீம்
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி
கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

திரு. டிக்கிரி கே ஜயதிலக்க,உதவி செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

**சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:**

கௌரவ பழனி திகாம்பரம், மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**சமூகமளித்திருந்த ஏனைய உறுப்பினர்கள்:**

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

**<u>திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

செல்வி டி.எஸ்.ஏ.கொஸ்தா, பணிப்பாளர், (நிதி) தேசிய வரவு செலவுத் திணைக்களம்

செல்வி எம்.ஆன் தாபரேரா, உதவிப் பணிப்பாளர் , தேசிய திட்டமிடல் திணைக்களம்

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

செல்வி எஸ். யக்கந்தாவல, பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

செல்வி ஐ.டி.எஸ். வசந்தா, கணக்காய்வாளர் அத்தியட்சகர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

ஒத்திவைப்பின் பிரகாரம் கூட்டம் கூடியது. கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் கூட்டத்திற்குக் தலைமை தாங்கினார்கள்.

**மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு**

**சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திருமதி ஆர்.நடராசபிள்ளை, செயலாளர், மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

திரு.டபிள்யூ.யூ.பி.பிரேமசந்திர, மேலதிக செயலாளர், (நிதி/நிருவாகம்)

செல்வி கே.டி.எம்.முணசிங்க, பணிப்பாளர், (திட்டமிடல்)

திருமதி வீ.அருள்ராஜா, பணிப்பாளர் (அபிவிருத்தி)

செல்வி டி.டி.சீ.செணவிரத்ன, தலைமை கணக்காளர்

திரு.கே.ஜீ.எஸ்.டபிள்யூ. வீரக்கொடி, தலைமை உள்ளக கணக்காய்வாளர்,

திரு.எம்.யூ.என். வலிசுந்தர, பொறியியலாளர், (ஆலோசனை)

திரு.யூ.எல்.ஜயசுந்தர, உதவிப் பணிப்பாளர், (வீடமைப்பு அபிவிருத்தி)

செல்வி கே.பிரதீபா, உதவிப் பணிப்பாளர், (உட்கட்டமைப்பு வசதிகள்)

செல்வி ரீ.டி.பன்கமுவ, உதவிப் பணிப்பாளர், (திட்டமிடல்)

செல்வி கே.கே.பீ.சிரோமி, உதவிச் செயலாளர்

செல்வி ஆர்.எம்.பந்திராகாந்தி, கணக்காளர்

திரு.ஆர்.பீ.தயாரத்ன, அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு.கே.டி.கே த சில்வா, அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு. எல்.ஆர். பெரேரா, பணிப்பாளர் நாயகம், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளை

திரு.அஜித் அபேசேக்கர, பணிப்பாளர் (பொறியியலாளர்)

திரு.ஆர்.வை.குலதுங்க, பணிப்பாளர் (நிதி)

கலாநிதி சுமித் ஆனந்த, பணிப்பாளர்(சுகாதார )

திரு. எம்.சிறீதரன், பணிப்பாளர்(நிதி) , பிரஜாசக்தி கண்காணிப்புப் பிரிவு

திரு. முத்துகுமார், பணிப்பாளர் ,(பிரஜாசக்தி)

குழு, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் 140 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்தது.

| ரூபா.'000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 1,284,094 | 4,367,886 | 3,748,375 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 189,124 | 335,376 | 348,375 |
| மூலதனச் செலவீனங்கள் | 1,094,970 | 4,032,510 | 3,400,000 |
| **140- மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 1,284,094 | 4,367,886 | 3,748,375 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 189,124 | 335,376 | 348,375 |
| மூலதனச் செலவீனங்கள் | 1,094,970 | 4,032,510 | 3,400,000 |

2015 இல் நிறுவப்பட்ட புதிய அமைச்சான மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் சுயவிபரம் உள்ளடங்கலாக 2017 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் செயலாற்றுகை, செயல்திறன் மற்றும் 2018 ஆண்டிற்கான இலக்குத் திட்டம் தொடர்பில் அமைச்சின் செயலாளர் திருமதி. ஆர் நடராசப்பிள்ளை அவர்கள் சமர்ப்பணம் ஒன்றினை முன்வைத்தார்.

2015 ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சு என்ற வகையில் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு நாட்டிலுள்ள மக்களுக்கு கணிசமான சேவைகளை வழங்கியமைக்காக கௌரவ அமைச்சர், செயலாளர் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு குழுவின் தவிசாளர் தன் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

கௌரவ. லக்ஷ்மன் செனவிரத்ன பின்வரும் விடயங்கள் பற்றி வினவினார்:

1) பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளை (PHDT) மற்றும் அரசாங்கத்துடனான அக்கம்பனிகளின் உறவுகள்

2) பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளைக்கு வரி செலுத்துவதற்கான காரணங்கள்

3) செலுத்தப்பட்ட வரியின் அளவு

4) நாட்டின் அரசாங்க அதிபர்களுடனான பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் ஒருங்கிணைப்பு

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளையானது அரசாங்கம், பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் (RPCs), மற்றும் தோட்டத் தொழிலில் உள்ள மக்கள் ஆகியோரினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக 1992 ஆம் ஆண்டில் அரச வர்த்தகமான அறிவித்தலின் ஊடாக தாபிக்கப்பட்ட முப்பரிமாண நிலையம் என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். தோட்டங்களில் ஏதேனும் வேலை செய்யும் போது, அது

பெருந்தோட்ட மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை (PHDT) நிறுவனத்தால் செய்யப்பட வேண்டும்.

பெருந்தோட்ட மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளைக்கு பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளினால் வழங்கப்பட்ட வரி பற்றி அமைச்சின் செயலாளர் குறிப்பிடுகையில் பெருந்தோட்ட மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளையானது கம்பெனிகள் சட்டத்தின் கீழ் காணப்படும் ஒரு சட்டபூர்வ அமைப்பு எனக் குறிப்பிட்டார். தோட்டத் தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக அது பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் ஒத்தழைப்புடன் நிறுவப்பட்டது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வரி செலுத்தப்படும் அளவு பற்றிய கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சு நிருவாகக் கட்டணத்தை மட்டுமே செலுத்துவதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்

நாட்டில் அரசாங்க அதிபர்களுடன் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் ஒருங்கிணைப்பு பற்றிய கேள்விக்கு பதிலளிக்கையில் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் தனியார் கம்பனிகளாக செயற்படுவதனால் அவர்களுடனான உதவி அரசாங்க அதிபர்களின் ஒருங்கிணைப்பானது திருப்திகரமானதாக இல்லை என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்வதிலும் மற்றும் பெருந்தோட்டத் துறையிலுள்ள மக்களுக்கு சில முக்கிய சேவைகளை வழங்குவதிலும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளை தற்போது கணிசமான நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பழனி திகாம்பரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். முன்னைய பணிப்பாளர்களுடன் ஒப்பிடுகையில் நாட்டின் சார்பில் குறிப்பிடத்தக்க சேவைகளை மிகவும் கஷ்டத்துடன் செய்துவருகின்ற பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளையின் தற்போதைய பணிப்பாளர் நாயகத்திற்கு கௌரவ பழனி திகாம்பரம் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுடன் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் ஒருங்கிணைப்புடன், நாட்டின் பெருந்தோட்ட மக்களின் சில பிரச்சினைகளைக் தீர்த்துக்கொள்வதற்கு அரசாங்க அதிபர்கள் மற்றும் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளிடையேயான உறவை வலுப்படுத்துவதற்கு குழுவின் தவிசாளர் விதந்துரைத்தார்.

பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் அரசாங்க அதிபர்களுடன் சிறந்த உறவைப் பேணவேண்டும் என கௌரவ லக்ஷமன் செனவிரத்ன அவர்கள் யோசனை தெரிவித்ததுடன் தற்போது பாவணையில் இல்லாத காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் அல்லது நாட்டின் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றை சமர்ப்பிப்தற்கு குழுவின் தவிசாளர் இணக்கம் தெரிவித்தார்.

மீரியபெத்தவில் நிர்மாணிக்கப்படும் வீடுகள் தொடர்பில் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் இரத்தினபுரி, கேகாலை மற்றும் பதுளை ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் தொடர்பில் கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கயில் மீரியபெத்தவில் கிரீன்வோல் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தற்போது வீடுகள் நிர்மாணிக்கப்படும் பணிகள் நடைபெறுவதாகவும் இரத்தினபுரி, கேகாலை மற்றும் பதுளை ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை முறையே 134 மற்றும் 136, 97 மற்றும் 08 மற்றும் 259 மற்றும் 31 ஆக அமைகின்றது என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்டங்களில் கண்டி மற்றும் மாத்தளை எனும் பிரதேசங்களில் "அவுட்குரோவர்" நிகழ்ச்சித்திட்டம் தற்போது வெற்றிகரமாக நடைபெறுவதாக கௌரவ ரவூப் ஹகீம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், ரங்கல, கண்டி போன்ற இடங்களில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் பரிந்துரைத்தார். தற்போது தோட்டப் பிரதேசங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பிற நாடுகளுக்கு செல்லுதல் பாரிய பிரச்சினையாக உள்ளதால் அவர்களை தக்கவைத்துக்கொள்ள இது ஒரு சிறந்த தீர்வாக அமையும். அது அடுத்த தலைமுறைக்கு அதிக வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் உதவும்.

தொலைவில் அமைந்துள்ள மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட தோட்டங்களுக்கு இலகு அணுகல் வசதிகளை வழங்குவதன் மூலமும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலமும் கிராமங்கள் மற்றும் தோட்டங்களுக்கிடையில் ஒருங்கிணைப்புகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குழுவின் தவிசாளர் தெரிவித்தார்.

தோட்டத் துறைகளில் காணப்படும் உள் வீதிகள் அரசாங்கத்திற்கோ அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கோ சொந்தமானவை அல்ல என கௌரவ மயில்வாகனம் திலகராஜா அவர்கள் தெரிவித்தார். தோட்டத் துறைகளில் காணப்படும் உள் வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விடயப் பரம்பலின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும் என கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்கள் தெரிவித்த யோசனைக்கு குழுவின் தவிசாளர் இணக்கம் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் துறை வைத்தியசாலைகளில் அரசாங்கத்தின் பங்கு 20 சதவீதம் மட்டுமே காணப்படுவதாகவும் அந்த வைத்தியசாலைகள் மாகாண சுகாதார அதிகார சபையின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும் என குழுவின் தவிசாளர் கருத்து தெரிவித்தார்

குழு, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் 140 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்து அங்கீகரித்தது

**பி.ப 2.00**

**<u>சமூகமளித்தோர்:</u>**

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ சி. சிறீதரன்
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ தாரக்க பாலசூரிய

திரு. டிக்கிரி கே ஜயதிலக்க,உதவி செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

**<u>சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:</u>**

கௌரவ டி.எம். சுவாமிநாதன், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**<u>திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

திருமதி நாலணீ அமரதுங்க, பணிப்பாளர், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம்

திரு.ஆர்.ஏ.ரீ.ஏ.ரணவீர, பிரதிப் பணிப்பாளர், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம்

திருமதி ஜயமாலி குணரத்ன, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

திரு.ஆர்.ஏ.எல்.உதயகுமார, அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்

திருமதி ஆர்ன் தாபரேரா, தேசிய திட்டமிடல் திணைக்களம்

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அலுவலகத்திலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

செல்வி ஐ சமரகே,உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி

செல்வி டபிள்யூ.டி.சீ.ரன்ஜித், கணக்காய்வாளர் அத்தியட்சகர்

ஒத்திவைப்பிற்கு அமைய குழு கூடியது. குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவலகல் அமைச்சு**

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்:**

பொறியியலாளர் திரு. பீ சுரேஷ், செயலாளர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

திரு.எஸ். பாஸ்கரன், மேலதிக செயலாளர், (நிருவாகம்)

திரு.பீ.செந்தில்நந்தனன், மேலதிக செயலாளர், (நிருவாகம்)

திரு.வீ.பிரேமசந்திரன், பணிப்பாளர், (நிறுவனம்சார் அபிவிருத்தி)

செல்வி நாமகல், பணிப்பாளர்(அபிவிருத்தி)

செல்வி என்.ஆர்.ஏ.பீ.ரணதுங்க, பிரதான கணக்காளர்

திரு.கே.ஜீ.எம்.பீ.விக்கிரமசிங்க, பணிப்பாளர்-திட்டமிடல்(பதில் கடமை)

திரு.எம்.எம்.எம்.மாஹிர், கணக்காளர்

திரு. டி.எம்.எஸ்.கே.திஸாநாயக்க, அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு.ஜீ.டி.எல். சிறீ குமார, அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு.நமசிவாயன் பந்மநாதன், தலைர், ஆட்களை மீள் குடியமர்த்தல், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில் அதிகார சபை

திரு.எச்.எம்.என்.சீ.தனசிங்க, ஆணையாளர் நாயகம்(சிறைச்சாலைகள்) சிறைச்சாலைகள் திணைக்களம்

திரு.எச்.சீ.டபிள்யூ. காரியவசம், ஆணையாளர் (நிதி)

திரு. பண்டார, பணிப்பாளர்(பொறியியலாளர்)

திரு.கே.ஜீ.சந்திரபால, பணிப்பாளர்(திட்டமிடல்)

திரு. ஏ.உமா மகேஸ்வரன், பணிப்பாளர், இந்து கலாசார திணைக்களம்

திரு. திரு.எம்.பீ.காண்டீபன், கண்காளர்

செல்வி சுசந்தி ஜயசிங்க, உதவி ஆணையாளர், சமூக சீர்த்திருத்தத் திணைக்களம்

மேஜர் ஜெனரால், ஆர்.எம்.ஜே.ஏ.ரத்நாயக்க, ஆணையாளர் நாயகம், (மீள் குடியேற்றம்) மீள் குடியமர்த்துகை ஆணைக்குழு

பிரிகேடியர் டபிள்யூ.வீ.பீ. டபிள்யூ .லியனகே, பதில் ஆணையாளர் நாயகம்

கர்னல் ஜே.எச்.ஓ.எம். ஜயசூரிய, பணிப்பாளர்(நிர்வாகம்)

கர்னல் எம். இஸ்சதீன், பணிப்பாளர்

திரு. எஸ்.ரீ.பரமேஸ்வரன், தலைவர்,நோத்சீ லிமிட்டெட்

திரு.ஈ. அண்ணாலிங்கம், பதவிநிலை பணிப்பாளர்

பொறி. எஸ்.எம்.யாஸீன், கருத்திட்டப் பணிப்பாளர், மீள் குடியமர்த்தலுக்கான அதிரடிப் படை

திரு. எம்.பீ.லோகநாதன், ஆணையாளர் நாயகம், பனை அபிவிருத்திச் சபை

திரு. ஆர்.ரமேஷ், முகாமைத்துவ உதவியாளர்

குழு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் 145,204,232 மற்றும் 326 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் ஆராய்ந்தது.

| ரூபா.. '000 | 2016 | 2017 மீள்வரவு செலவுத்திட்டம் | 2018 மதிப்பீடு |
|---|---|---|---|
| **மொத்தச்செலவினம்** | 22,007,886 | 19,781,971 | 11,425,912 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 6,106,453 | 6,892,746 | 8,278,162 |
| மூலதனச் செலவீனங்கள் | 15,901,433 | 12,889,225 | 3,147,750 |
| **145- சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்** | | | |
| **மொத்தச் செலவினம்** | 14,622,937 | 12,723,340 | 4,818,150 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 932,772 | 1,011,265 | 2,676,150 |
| மூலதனச் செலவீனங்கள் | 13,690,165 | 11,712,075 | 2,142,000 |
| **204- இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 226,806 | 244,548 | 249,110 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 131,703 | 149,898 | 154,460 |
| மூலதனச் செலவீனங்கள் | 95,103 | 94,650 | 94,650 |
| **232- சிறைச்சாலைகள் திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 6,898,740 | 6,539,744 | 6,066,694 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 4,792,326 | 5,467,744 | 5,170,594 |
| மூலதனச் செலவீனங்கள் | 2,106,414 | 1,072,000 | 896,100 |
| **326- சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம்** | | | |
| **மொத்தச்செலவினம்** | 259,402 | 274,339 | 291,958 |
| மீண்டுவரும் செலவீனங்கள் | 249,652 | 263,839 | 276,958 |
| மூலதனச் செலவீனங்கள் | 9,750 | 10,500 | 15,000 |

2017 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதியியல் மேம்மாடு மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் பற்றி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர்(பொறியியலாளர்) பீ.சுரேஷ் விளக்கமளித்தபோது, வடக்கு-கிழக்கு மாகாணங்களில்

மீள் குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்தல், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விசேட கருத்திட்டங்கள், கண்ணி வெடிகளை அகற்றும் நிலையத்தினால் செயற்படுத்தப்படும் கண்ணி வெடிகளை அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் புதிய மற்றும் செயற்படுத்தப்பட்டுவரும் கருத்திட்டங்களின் 2018 ஆம் ஆண்டில் எதிர்ப்பார்க்கப்படும் முன்னேற்றம் பற்றி குறிப்பிட்டார்.

புதிய வீடுகளை நிர்மாணித்தல், அகதி முகாம்களிலிருந்து சொந்த இடங்களுக்கு திரும்புபவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்தல், சிறிய நீர் தாங்கிகளை நிர்மாணித்தல், துப்பரவு ஏற்பாட்டு வசதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்தல், வாழ்வாதார உதவிகளை வழங்கல், கல்வித் துறைசார்ந்த அபிவிருத்தி, வீட்டுகளுக்கான மின்சார வசதிகள், காணிகள் இல்லாதவர்கள் தொடர்பில் காணிகளை கொள்வனவு செய்தல், பனை கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் மற்றும் கடந்த இரு ஆண்டுகளில் ஈட்டப்பட்டுள்ள இலாபம், நோர்த் சீ லிமிடெட்டின் விபரங்கள், இந்து கலாசார அலுவல்கள் மற்றும் மாங்குளம் கருத்திட்டத்தின் அபிவிருத்தி அலுவல்கள் ஆகிய விபரங்கள் பற்றி அமைச்சின் செயலாளர் மேலும் விளக்கமளித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவில் ஒரு பகுதி சேதமடைந்துள்ள வீடுகளை புனரமைக்கும் கருத்திட்டம், புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்நோக்கிவரும் நிதி நெருக்கடிகள் மற்றும் மாங்குளத்தில் பொருளாதார வலயங்களை திறந்துவைத்தல், ஏற்றுமதிச் சந்தை தொடர்பில் பனை உற்பத்திகளை ஊக்குவித்தல் ஆகிய விடயங்கள் பற்றி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் கௌரவ டி.எம். சுவாமிநாதன் அவர்கள் விளக்கமளித்தார்கள்.

2017 ஆம் ஆண்டு தொடர்பில் 160 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டபோதிலும் பல்லேகலே சிறைச்சாலைகள் கட்டிட தொகுதியின் நிர்மாணிப்புப் பணிகள் காலதாமதம் அடைதல் தொடர்பில் கௌரவ மயந்த திசாநாயக்க அவர்கள் வினவினார்கள். சிறைச்சாலையின் உட்பகுதியின் பாதுகாப்பு தொடர்பில் கூடிய கவனத்துடன் நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொண்டுவருவதால் இக் கருத்திட்டத்தின் பணிகள் மெதுவாக முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் அப் பணிகளை இரு வருடங்களுக்குள் பூர்த்தி செய்வதாகவும் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் (சிறைச்சாலைகள்) திரு.எச்.எம்.என்.சீ.தனசிங்க குறிப்பிட்டார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட 12000 பேர்களைச் சேர்ந்த வலது குறைந்தவர்கள் மற்றும் பெண்களின் நலனோம்புகை தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் விவசாயம் அவர்களின் வாழ்க்கைத் தொழிலாக அமைவதால் மன்னார் பிரதேசத்தில் நிலவிவரும் முக்கியமான பிரச்சினையான நீர் பற்றாக்குறைக்கான தீர்வொன்றை கண்டுபிடிக்குமாறு கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு நீர்த் தாங்கியை வழங்குவதற்காக (ஒரு கிராமத்துக்கு ஒரு தாங்கி வழங்கும் கருத்திட்டம்) நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் உதவியுடன் அக் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டுவருவதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட 12000 பேரை கண்காணிக்கும் பொறிமுறை பற்றியும் அவர்கள் மீள் குடியமர்த்தப்பட்டபின் வருமானம் ஈட்டிவருகின்றார்களா என்பது பற்றியும் கௌரவ தவிசாளர்

வினவினார். வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட்ட எல்லா மாவட்டங்களிலும் தங்கள் அலுவலகமொன்றை செயற்படுத்தி வருவதாகவும் சுயதொழில்கள் மற்றும் வேறு வர்த்தகங்கள் தொடர்பில் உதவியளித்துவருவதுடன் நீர், தையல் இயந்திரங்கள், பால்மாடுகள்,கோழிக் குஞ்சுகள் உட்பட்ட ஏனைய வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக, ஆணையாளர் நாயகம், (புனர்வாழ்வளிப்பு) மீள் குடியமர்த்துகை ஆணைக்குழு, மேஜர் ஜெனரால், ஆர்.எம்.ஜே.ஏ.ரத்நாயக்க பதலளித்தார். வீடு மற்றும் காணி அவர்களின் முக்கியமான பிரச்சினையாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு போதிய நிலையில் இல்லையெனவும் 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டினை அதிகரிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். விவசாயம் மற்றும் கடற்றொழில் தொடர்பில் வசதியளிப்பதற்காக யோத வாவி, இரனைமடு குளம் மற்றும் மகாதித்த மீன்பிடித் துறைமுக கருத்திட்டத்தை அபிவிருத்தி செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

முப்படையைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் விதவைகள் மற்றும் யுத்தநிலை காரணமாக விதவைகளானவர்களின் நலனோம்புகை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார். நீர் தாங்கிகள் கருத்திட்டம் மற்றும் முப்படையைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் விதவைகள் மற்றும் யுத்தநிலை காரணமாக விதவைகளானவர்களின் தற்கால விபரங்களை ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட குழுக்களுக்கிடையே தொழில் இல்லா பிரச்சினைக்குத் தீர்வாக அகதி முகாம்களில் வாழ்ந்துவரும் இளைஞர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ தவிசாளர் பிரேரணை தெரிவித்தார்.

மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் கலந்தாலோசித்து தேசிய தொழிற் சான்றிதழ்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ தவிசாளர் பிரேரணை தெரிவித்தார்.

குழு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் 145, 204, 232 மற்றும் 326 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளை ஆராய்ந்து அங்கிகரித்தது.

---------------------------

**2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவின் ஐந்தாவது கூட்டக் குறிப்புகள்**

(2017 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு

**சமூகமளித்தோர்**

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ லக்ஷமன் செனவிரத்ன
கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதியின் பிரதானியும் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும்

திரு. டிக்கிரி கே.ஜயதிலக்க, உதவிச் செயலாளர் நாயகம்

அறிவித்தலின் பிரகாரம் கூட்டம் கூடியது. குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள்.

அறிக்கையின் வரைபை ஆராய்ந்த குழு சில திருத்தங்களுக்கு அமைய அதற்கு இணக்கம் தெரிவித்தது.

அறிக்கையை ஆராய்ந்த குழு அதனை 2017 திசெம்பர் மாதம் 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானித்தது.

குழுவிற்கு பெறுமதியான பங்களிப்பை வழங்கியமைக்காக குழுவிற்கு தலைமைதாங்கிய அமைச்சர்களுக்கும் குழுவின் அங்கத்தவர்களுக்கும் குழுவின் தவிசாளர் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். மேலும் பாராளுமன்றத்தின் பணியாட்டொகுதியின் பிரதானியும் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமும், பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகமும் குழுவின் செயலாளரும் மற்றும் பாராளுமன்ற பதவியணியினருக்கும் சிறப்பான சேவையை வழங்கியது தொடர்பில் அவர்களது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

குழு, மு.ப.11.50 மணிக்கு பூர்த்தி செய்யப்பட்டது.

ஒப்பம்/ டிக்கிரி கே. ஜயதிலக்க

குழுவின் செயலாளர்

------------------------------